**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.04.2013 A.M**

---

## கிராமங்களில் உழவர் பெருவிழா

விக்கிரவாண்டி அருகே உள்ள சிந்தாமணி மற்றும் மேலக்கொந்தை கிராமங்களில் உழவர் பெருவிழா சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

சிந்தாமணி கிராமத்தில் நடைபெற்ற இவ் விழாவுக்கு விக்கிரவாண்டி உதவி இயக்குநர் ராம.ராமசாமி வரவேற்றார். விக்கிரவாண்டி ஒன்றிய அதிமுக செயலர் ஏ.வேலு முன்னிலை வகித்தார். மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் அலமேலு வேலு வாழ்த்தி பேசினார்.

விழாவில் வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை, மற்றும் வேளாண் வணிகத் துறை அலுவலர்கள் பங்கேற்று துறை சார்ந்த திட்டங்களையும், தொழில்நுட்பங்களையும் எடுத்துக் கூறினர். இவ் விழாவில் புழுதி கலைக்குழுவின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. விவசாயிகளுக்கு அறுசுவை மதிய உணவு வழங்கப்பட்டது.

முடிவில் துணை வேளாண்மை அலுவலர் மா.சுப்பிரமணியன் நன்றி கூறினார். விழாவில் 270 விவசாயிகள் பங்கேற்றனர்.

மேலக்கொந்தை: அதேபோல் மேலக்கொந்தை கிராமத்தில் ஊராட்சித் தலைவர் செ.அலமேலு தலைமையில் உழவர் பெருவிழா நடைபெற்றது. இவ் விழாவில் வேளாண்மை அலுவலர் ரா.ஜோதிமணி, துணை வேளாண்மை அலுவலர் மா.சுப்பிரமணியன், உதவி வேளாண்மை அலுவலர்கள், ஆத்மா திட்ட அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கொடூர் கிராமத்தில்...

வானூர் அருகே உள்ள கொடூர் கிராமத்தில் உழவர் பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

வானூர் சட்டமன்ற உறுப்பினர் என்.ஐ.ஜானகிராமன் தலைமை வகித்தார். மாவட்ட கவுன்சிலர் பக்தவச்சலம், சக்கரபாணி, ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி உயக்குநர் கென்னடி ஜெபக்குமார் மண்ணின் வளம் குறித்து பேசினார்.

இவ் விழாவில் 28 பயனாளிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி மானியம் ரூ.2.5 லட்சம், நுண்ணீர் பாசன கருவிகள், எண்ணெய்ப்பனை சாகுபடி மானியங்கள் முதலியவை வழங்கப்பட்டன.

மாவட்ட கவுன்சிலர் பக்தவச்சலம், முன்னாள் எம்எல்ஏ கணபதி, கொடூர் ஊராட்சி மன்ற தலைவர் பாலசுப்பிரமணியம், ஒழிந்தியாப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் பிச்சைக்காரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கள்ளக்குறிச்சியில்...

கள்ளக்குறிச்சி, ஏப்.29: கல்வராயன்மலைப் பகுதியைச் சேர்ந்த கரியாலூரில் தோட்டக்கலைத்துறையின் சார்பில் உழவர் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஊரக தொழில்துறை அமைச்சர் ப.மோகன், தோட்டக்கலைத்துறையின் கண்காட்சி அரங்கை திறந்து வைத்து, 40 பயனாளிகளுக்கு ரூ.40 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

முன்னதாக கரியாலூர்-ஈச்சங்காடு பகுதிக்கு புதிய போக்குவரத்து வழித்தடத்தை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் ரா.பிருந்தாதேவி, ஒன்றியக்குழுத் தலைவர் அ.வெள்ளி, கோட்டாட்சியர் சி.ராஜசேகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் கே.இராசு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## திருந்திய நெல் சாகுபடிக்கு மாற விவசாயிகளுக்கு அழைப்பு

திருந்திய நெல் சாகுபடி முறைக்கு விவசாயிகள் அனைவரும் மாறி பல மடங்கு வருவாயை ஈட்ட வல்லம் வட்டத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் அழைப்பு விடுக்கப்பட்டது.

வல்லம் வட்டாரத்தில் உழவர் பெருவிழா கடந்த 14-ம்தேதி முதல் நடைபெற்று வருகிறது. பெரும்புகை, நாட்டார்மங்கலம், சேர்விளாம், ராஜாம்புலியூர்,களையூர், உள்ளிட்ட கிராமங்களில் சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை இரண்டு மடங்காக மாற்றுவது குறித்து செயல் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

விழாவிற்கு தலைமை வகித்த வல்லம் ஒன்றியக்குழுத் தலைவர் கா.அண்ணாதுரை பேசியது:

தமிழகத்தில் இரண்டாவது பசுமை புரட்சியை உருவாக்கவே, உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது. இங்கு தரும் ஆலோசனைகள், தொழில்நுட்பங்கள், மானியங்கள்

போன்றவற்றை விவசாயிகள் முறையாக செயல்படுத்தினால், அவர்களின் வருமானம் மூன்று மடங்காக உயர வாய்ப்புள்ளது.

நான், எனது நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல் பயிரிட்டேன்.

தேவையான அளவு மட்டும் யூரியா உரமிட்டு, களைக்கருவி கொண்டு களையினை மடக்கி உரமாக்குவதன் மூலம் சாதா நடவு பயிரினை விட கூடுதலாக ஏக்கருக்கு 10 மூட்டை நெல் கிடைத்தது. அனைத்து விவசாயிகளும் திருந்திய நெல் சாகுபடி முறைக்கு மாறினால், பலமடங்கு பலன் பெற முடியும் என்றார்.

மேலும் அந்தந்த கிராமங்களில் இடு பொருட்களை விவசாயிகளுக்கு வழங்கினார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் துறை அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணாபுரம்: செஞ்சி வேளாண்மைதுறை சார்பில் உழவர் பெருவிழா செஞ்சி கிருஷ்ணாபுரம் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளியில் திங்கள்கிழமை நடைபெற்றது.

பேரூராட்சி 6-வது வார்டு கவுன்சிலர் அனுசுயா ராமானுஜம் தலைமை வகித்தார்.

பேரூராட்சி கவுன்சிலர்கள் சீனுவாசன் நாகராஜன் முன்னிலை வகித்தனர்.

விழாவில் செஞ்சி வேளாண்மை துறை உதவி இயக்குநர் சுகுமார் கலந்து கொண்டு களையெடுக்கும் கருவியை விவசாயிகளுக்கு வழங்கினார்.

வேளாண்மை அலுவலர் இம்மானுவேல், ஜெயபாரதி, ஆதினா, தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர் அம்பேத்கர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சிறு, குறு விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கும் திட்டம் இன்று துவக்கம்

மதுரை மாவட்டத்தில் தகுதியுடைய அனைத்து விவசாயிகளுக்கும் சிறு, குறு விவசாயிக்கான சான்றிதழ் வழங்கும் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் செவ்வாய்க்கிழமை துவக்கி வைக்கிறார்.

சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் வணிகம் போன்ற பல துறைகளில் சொட்டுநீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனக் கருவிகள், டிராக்டர், பவர் டில்லர் போன்ற பண்ணை இயந்திரங்கள் மானிய விலையில்

வழங்கப்படுகின்றன. ஆனால், இவற்றைப் பெறுவதற்கு வருவாய்த் துறையினர் வழங்கும் சிறு, குறு விவசாயிக்கான சான்று அளிக்க வேண்டியது அத்தியாவசியமாகிறது.

முதல் கட்டமாக மதுரை வடக்கு வட்டத்தில் 639 குறு விவசாயிகளுக்கும், 418 சிறு விவசாயிகளுக்கும் ஆட்சியரால், செவ்வாய்க்கிழமை சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## விவசாயிகள் மாவட்ட ஆட்சியரிடம் மனு

விவசாய நிலங்களுக்கு மத்தியில் சாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அப்பகுதி விவசாயிகள் மாவட்ட ஆட்சிரிடம் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார் சத்திரம் ஒன்றியம், முருநெல்லிக்கோட்டை ஊராட்சிக்கு உள்பட்ட குப்பமடை என்னும் இடத்தில் தனிநபருக்கு சொந்தமான வீட்டுமனைகளுக்கு, பாதை அமைப்பதற்காக விவசாய நிலங்களை கையகப்படுத்தும் பணிகளை அந்த ஊராட்சி மன்றத் தலைவர் செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

பலருக்கு சொந்தமான அந்த இடத்தினை கையகப்படுத்துவதை கண்டித்து முருநெல்லிக்கோட்டை மற்றும் நவாமரத்துப்பட்டி ஊராட்சிகளுக்கு உள்பட்ட கேத்தம்பட்டி, காமாட்சிபுரம், சுள்ளெறும்பு, ஜி.நடுப்பட்டி, கே.புதூர், கோம்பையூர், குருநாதநாயக்கனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு கொடுப்பதற்கு ஆட்சியர் அலுவலகத்திற்கு திங்கள்கிழமை வந்திருந்தனர். பிரச்னை குறித்து அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தது: விவசாய நிலங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள இடத்தில் தனிநபர் வீட்டுமனைகளை ஏற்படுத்தி விற்பனை செய்வதற்கு திட்டமிட்டுள்ளார். இதற்கு அதிகாரிகளும் ஆதரவாக செயல்பட்டு வருகின்றனர். ஒரு தனி மனிதனின் ஆதாயத்திற்காக இந்த நிலங்களை கையகப்படுத்தினால், பல விவசாயிகள் பாதிக்கப்படும் சூழல் உள்ளது.

எனவே மாவட்ட நிர்வாகம் தலையிட்டு பாதை அமைப்பதற்கு தடை விதிக்க வேண்டும் என்றனர்.

## கால்நடை மருத்துவமனை செயல்படாததால் விவசாயிகள் பாதிப்பு

கொடைக்கானலில் கால்நடை மருத்துவமனை செயல்படாததால் விவசாயிகள் பாதிப்புக்குள்லாகி வருகின்றனர்.

கொடைக்கானலில் சுற்றுலா பகுதி மட்டுமன்றி முக்கியத் தொழிலாக விவசாயம் நடைபெற்று வருகிறது விவசாயப் பகுதிகளான கே.சி.பட்டி, கும்பறையூர், வில்பட்டி, அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, கடல்கொடை, பள்ளங்கி, கோம்பை, பூம்பாறை, செண்பகனூர், மன்னவனூர்,

கிளாவரை, கூக்கால், போலூர் உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டு பல இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்த விவசாய நிலங்களில் விளையக் கூடிய புல், செடிகள், காய்கறிகளின் இலை தழை போன்றவை விவசாயிகளின் கால்நடைககளுக்கு தீவனமாக பயன்பட்டு வருகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் 100-க்கும் மேற்பட்ட மாடுகள் வளர்க்கப்பட்டு வருகிறது. இவற்றுக்கு ஏற்படும் பல்வேறு நோய்களுக்கும் சிகிச்சைபெற கால்நடை மருத்துவமனையை விவசாயிகள் நாடிச் செல்கின்றனர். வில்பட்டி, நாயுடுபுரம், அப்சர்வேட்டரி, கொடைக்கானல் உள்ளிட்ட மேல்மலை மற்றும் கீழ்மலைப் பகுதி கிராமங்களில் கால்நடை பராமரிப்பு மருத்துவமனை இருந்து வந்தது. ஆனால் கடந்த 15-வருடங்களுக்கு மேலாக இந்த மருத்துவமனைகள் செயல்படாமல் உள்ளன. கொடைக்கானல் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அந்த இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு குடியிருப்பு மற்றும் கேளிக்கை விடுதிகளாக மாறி வருகின்றன.

மேலும் குறிப்பிட்ட நேரங்களில் மருத்துவமனைக்குச் சென்றால் மருத்துவர்கள் இல்லாததால் கால்நடைகள் இறக்கும் நிலை உருவாகிறது.

இதனால் கால்நடை மருத்துவமனைகள் இயங்க, உரிய ஆய்வாளர்கள் நியமிக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கால்நடை ஆய்வாளர்கள் நியமனம் குறித்து அரசுக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது ஓசூர்,ஒரத்தநாடு ஆகிய இடங்களில் கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர் விரைவில் கொடைக்கானல் தாலுகாவிற்கு ஆய்வாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என அத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சூறைக் காற்றால் வாழைகள் சேதம்

தேனி வட்டம், கோட்டூர், சீலையம்பட்டி, பூமலைக்குண்டு ஆகிய பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இரவு வீசிய சூறைக் காற்றில் ஏராளமான வாழை, முருங்கை மற்றும் தென்னை மரங்கள் ஒடிந்து விழுந்து சேதமடைந்தன.

மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக பரவலாக சூறைக் காற்று வீசி லேசான மழை பெய்து வருகிறது. சில நாட்களுக்கு முன் சீப்பாலக்கோட்டை, கன்னியப்பபிள்ளைபட்டி, ஆண்டிபட்டி ஆகிய பகுதிகளில் சூறைக் காற்றால் வாழை மற்றும் முருங்கை மரங்கள் ஒடிந்து விழுந்து சேதமைடைந்தன. தேனி, வீரபாண்டி, கோட்டூர், சீலையம்பட்டி, தர்மாபுரி, பூமலைக்குண்டு ஆகிய பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இரவு வீசிய சூறைக் காற்றில் ஏராளமான வாழை,

முருங்கை மற்றும் இலவம் மரங்கள் ஒடிந்து விழுந்தன. பல இடங்களில் வீடு மற்றும் கடைகளின் மேற்கூரைகள் சேதமடைந்தன. வீரபாண்டியில் சாலையோரத்தில் வைக்கப்பட்டிருந்த ராட்சத விளம்பர தட்டிகள் சரிந்து விழுந்தன. கோட்டூரில் அரசு மாணவிகள் விடுதியின் முன் உள்ள மரம் ஒடிந்து விழுந்ததில், விடுதியின் சுற்றுச் சுவர் சேதமடைந்தது. மரக்கிளைகள் மற்றும் மின் கம்பங்கள் ஓடிந்து விழுந்து மின் தடை ஏற்பட்டது.

கோட்டூரைச் சேர்ந்த விவசாயி முருகேசன் கூறியது: கோட்டூர் பகுதியில் 100 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் தார் வெட்டும் நிலையில் இருந்த வாழை மரங்கள் ஒடிந்து விழுந்து சேதமடைந்துள்ளன. மரங்களுக்கு முட்டு கொடுத்து பாதுகாத்து வைத்திருந்தும் காற்றின் வேகத்தில் தாக்குப் பிடிக்கவில்லை. தென்னை மரங்கள் வேரோடு சாயந்து விழுந்துள்ளன. இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிட்டு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க தோட்டக் கலைத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 55,310 பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கல்

தேனி மாவட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 55 ஆயிரத்து 310 பேருக்கு மொத்தம் ரூ.60 கோடியே 38 லட்சத்து 39 ஆயிரத்து 780 மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இது குறித்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அரசு சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக உள்ள விவசாய தொழிலாளியின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக விடுதியில் தங்கியிருந்து தொழிற் கல்வி, கவின்கலை, ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பயிற்சி பட்டயப் படிப்பு படிப்பவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் மாணவருக்கு ரூ.1,450, மாணவிக்கு ரூ.1,950 வழங்கப்படுகிறது. வீட்டில் இருந்து சென்று படித்து வரும் மாணவருக்கு ரூ.1,250, மாணவிக்கு ரூ.1,750 வழங்கப்படுகிறது.

இளங்கலை படிப்புக்கு விடுதி மாணவருக்கு ரூ.2,000, மாணவிக்கு ரூ.2,500, வீட்டில் இருந்து சென்று படித்து வரும் மாணவருக்கு ரூ.1,750, மாணவிக்கு ரூ.2,250 வழங்கப்படுகிறது. முதுகலை படிப்புக்கு விடுதி மாணவருக்கு ரூ.3,250, மாணவிக்கு ரூ.3,750, வீட்டில் இருந்து சென்று படித்து வரும் மாணவருக்கு ரூ.2,250, மாணவிக்கு ரூ.2,750 வழங்கப்படுகிறது.

சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல், வேளாண்மை படிப்பு படிக்கும் விடுதி மாணவருக்கு ரூ.4,250, மாணவிக்கு ரூ.4,750, வீட்டில் இருந்து சென்று படித்து வரும் மாணவருக்கு ரூ.2,250, மாணவிக்கு ரூ.2,750, முதுநிலை தொழிற் கல்வி படிக்கும் விடுதி

மாணவருக்கு ரூ.6,250, மாணவிக்கு ரூ.6,750, வீட்டில் இருந்து சென்று படித்து வரும் மாணவருக்கு ரூ.4,250, மாணவிக்கு ரூ.4,750 மாத உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

உழவர் பாதுகாப்புத் திட்ட உறுப்பினரின் திருமணத்துக்கு ஆணுக்கு ரூ.8,000, பெண்ணுக்கு ரூ.10 ஆயிரம் நிதி உதவி வழங்கப்படுகிறது. இயற்கை மரணத்துக்கு ரூ.10 ஆயிரம், ஈமக்கிரியை செலவுக்கு ரூ.2,500 வழங்கப்படுகிறது. விபத்து மரணத்துக்கு நிவாரணமாக குடும்பத்துக்கு ரூ.ஒரு லட்சத்து 2,500 வழங்கப்படுகிறது. 60 வயதுக்கு மேற்பட்ட உழைக்கும் திறனற்ற உறுப்பினர்கள், காச நோய், எய்ட்ஸ், புற்றுநோய், சிறுநீரக பாதிப்பு உள்ளவர்களுக்கு மாத உதவி மற்றும் கொடிய நோய் பாதிப்பு உள்ளவர்களுக்கு அரசு மாத உதவித் தொகையாக ரூ.1000 வழங்குகிறது.

மாவட்டத்தில், இந்தத் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக உள்ள 7,710 பேருக்கு கல்வி உதவித் தொகை, 1,143 பேருக்கு திருமண நிதி உதவி, 1,443 பேருக்கு இயற்கை மரண நிவாரணம், 89 பேருக்கு விபத்து மரண நிவாரணம், 44 ஆயிரத்து 648 பேருக்கு மாத உதவித் தொகை ஆகியவற்றுக்காக இது வரை மொத்தம் ரூ.60 கோடியே 38 லட்சத்து 39 ஆயிரத்து 780 வழங்கப்பட்டுள்ளது.

தகுதியுள்ள விவசாய தொழிலாளிகள் உழவர் பாதுகாப்புத் திட்டதின் கீழ் உறுப்பினராக பதிவு செய்து, அடையாள அட்டை பெற்று அரசு நலத் திட்ட உதவிகளை பெற்று பயனடையலாம் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வங்கிக் கடன் மூலம் விவசாயக் கருவிகள்: ஆட்சியர்

விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படும் விவசாயக் கருவிகளை வங்கிக் கடன் மூலம் பெறலாம் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தெரிவித்தார்.

திருப்புவனம் ஒன்றியம், பனையனேந்தல் ஊராட்சியில் உழவர் பெருவிழா திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் ரூ.40,000 மதிப்பில் விவசாயப் பணிக்கு ஐந்து கொழுவுடன் கூடிய விவசாயக் கருவி நிலப்பகுதியில் செயல்படுவது குறித்த செயல்விளக்கம் ஆட்சியர் முன்னிலையில் நடைபெற்றது. அதைப் பார்வையிட்ட பின்னர் அவர் பேசியது:

ஐந்து கொழுவுடன் கூடிய விவசாயக் கருவி மூலம் மேடு, பள்ளங்கள் உள்ள நிலப்பகுதியை சமமாக ஆக்கலாம். நிலத்தை சீரமைத்து பின்னர் உழுவதால் பயிர்களுக்கு தண்ணீர் சீராக கிடைக்கும். இதுபோன்ற கருவிகள் தங்கள் பகுதிகளுக்கு தேவைப்படும்போது வேளாண் துறையுடன் இணைந்து, வங்கிகளின் மூலம் கடன் திட்டத்தில் பெற்றுக் கொள்ளலாம். விவசாயிகள் மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தின் கீழ் வேளாண் கருவிகளை பெற்று

உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும். கிராமப் பகுதிகளில் கோழி, கறவை மாடு, பட்டு வளர்ப்பு ஆகிய பயிற்சிகள் அரசு மூலம் வழங்கப்படுகிறது. இதில் ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்று தொழில் மையங்களை உருவாக்க வேண்டும் என்றார்.

பின்னர் வாவியரேந்தல் ஊராட்சியில் செயல்பட்டு வரும் ரேஷன் கடையில் பொருள்களின் இருப்பு நிலவரத்தை ஆய்வு செய்து அங்குள்ள பொதுமக்களிடம் தேவையானப் பொருள்கள் குறித்த காலத்திற்குள் கிடைக்கிறதா? எனக் கேட்டார்.

தொடர்ந்து திருப்பாச்சேத்தி ஊராட்சியில் ஆய்வு செய்யும்போது, பொதுமக்கள் தற்போது செயல்பட்டு வரும் மேல்நிலைத் தண்ணீர் தொட்டியிலிருந்து மேடான பகுதிகளுக்கு தண்ணீர் செல்வதில்லை என்பதால் கூடுதலாக 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலைத் தண்ணீர் தொட்டி அமைத்துக் கொடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பாக ஊரக வளர்ச்சித் துறையின் பொறியாளர் ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆட்சியர் அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் தலைவர் சிவதேவ்குமார், வேளாண் இணை இயக்குநர் செல்லத்துரை, திருப்புவனம் ஒன்றியக் குழுத் தலைவர் பாக்கியலெட்சுமி, வேளாண் உதவி இயக்குநர்கள் ஜெயக்கொடி, கல்யாண சுந்தரம், ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயராஜ், ஒன்றியக் குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு விலையில்லா இடுபொருள்கள்

சின்னத்தடாகம் அருகே நஞ்சுண்டாபுரம் ஊராட்சியில் நடந்த உழவர் தினவிழாவில், விவசாயிகளுக்கு விலையில்லா இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

பெ.நா.பாளையம் வேளாண்மைத் துறை சார்பில் நடந்த இவ்விழாவிற்கு, நஞ்சுண்டாபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் வி.கே.வி.சுந்தரராஜன் தலைமை வகித்தார். பெ.நா.பாளையம் ஒன்றிய சேர்மன் வீரபாண்டி விஜயன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கவுண்டம்பாளையம் தொகுதி எம்.எல்.ஏ. வி.சி.ஆறுக்குட்டி பேசியது:

விவசாயத்தை மேம்படுத்த பாண்டியாறு புன்னம்புழா, அத்திக்கடவு அவினாசி நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டங்களை நடைமுறைப்படுத்த தமிழக முதல்வர் முழு முயற்சி எடுத்துவருகிறார்.

லட்சக்கணக்கில் மானியங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியைப் பார்வையிட்டதோடு, விவசாயிகளுக்கு விலையில்லா இடுபொருள்களையும், பருத்தி ஆடைகளையும் அவர் வழங்கினார்.

உதவி வேளாண்மை இயக்குநர் ஷபி அகமது வரவேற்றார். அலுவலர் சீனிராஜ் நன்றி கூறினார்.

விழாவில் துணைத் தலைவர் திருநாவுக்கரசு, ஒன்றிய கவுன்சிலர் குணசேகரன், ஊராட்சி உறுப்பினர்கள் மருதப்பன், நாகராஜ், சோமசுந்தரம் மற்றும் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 34.01 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 34.01 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 444 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் வந்தது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 1.61 டி.எம்.சி.

## சிறு தானியங்கள் பயிரிட அறிவுரை

உடல் நலத்துக்கு ஊறுவிளைவிக்காத பாரம்பரிய சிறு தானியங்களை பயிரிட விவசாயிகள் முன்வர வேண்டும் என உழவர் பெருவிழாவில் வலியுறுத்தப்பட்டது.

மஞ்சூர் இரியசீகை கிராமத்தில் உழவர் பெருவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. ஊர்த் தலைவர் எல்.ஆரிகவுடர் தலைமை வகித்தார். குந்தா ஊராட்சித் தலைவர் வனிதா பிரகாஷ், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய ஆய்வாளர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை வேளாண்மை அலுவலர் தேசிங்கு வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மண்மாதிரி எடுத்தல், நேரடி உரம் தயாரித்தல் குறித்து நேரடி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து நவீன முறையில் பயிர் சாகுபடி செய்வது குறித்தும், விவசாயிகளின் கேள்விகளுக்கும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் விளக்கமளித்தனர்.

இதைத்தொடர்ந்து, ரூ.62 ஆயிரம் மதிப்பிலான வேளாண் கருவிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. கால்நடை பராமரிப்புத் துறை மருத்துவர் ஜெயக்குமார்,

வேளாண் பொறியியல் துறை அலுவலர் ராதாகிருணன், உபாசி அறிவியல் ஆராய்ச்சி மைய பிரதிநிதி மகாலிங்கம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## உழவர் பெருவிழாக்கள்

திருவண்ணாமலையை அடுத்த மேலத்திக்கான், கீழ்கச்சிராப்பட்டு கிராமங்களில் திங்கள்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

மேலத்திக்கான் கிராமத்தில் நடைபெற்ற விழாவுக்கு, ஊராட்சித் தலைவர் சுந்தரமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்ட விவசாயிகள் சங்க நிர்வாகி ஜி.எஸ்.ஏழுமலை முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் ஜெ.சுந்தரமூர்த்தி வரவேற்றார்.

திருவண்ணாமலை வேளாண்மை உதவி இயக்குநர் இரா.பெரியசாமி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு துல்லிய பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கிப் பேசினார்.

கீழ்கச்சிராப்பட்டு கிராமத்தில் ஊராட்சித் தலைவர் முத்துக்குமார் தலைமையில் உழவர் பெருவிழா நடைபெற்றது. இவ் விழாக்களில் வேளாண் கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. பல்வேறு துறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்டு அந்தந்த துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்துப் பேசினர்.

## இன்று உழவர் பெருவிழா நடைபெறும் இடங்கள்

திருவண்ணாமலை மாவட்டத்தின் 18 ஒன்றியங்களிலும் செவ்வாய்க்கிழமை (ஏப்ரல் 30) பல்வேறு இடங்களில் உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

திருவண்ணாமலை ஒன்றியம் வாணியந்தாங்கல், நொச்சிமலை, சோ.கீழ்நாச்சிப்பட்டு, துரிஞ்சாபுரம் ஒன்றியம் ஆ.பாளையம், சாலையனூர், கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் அனுக்குமலை, பொன்னமேடு, செங்கம் ஒன்றியம் புதுப்பட்டு, ஆலத்தூர், தண்டராம்பட்டு ஒன்றியம் தரடாப்பட்டு, சின்னியம்பேட்டை, புதுப்பாளையம் ஒன்றியம் கல்லரைப்பாடி, போளூர் ஒன்றியம் கஸ்தம்பாடி ஆகிய கிராமங்களில் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இதேபோல, கலசப்பாக்கம் ஒன்றியம் சீனந்தல், தேவராயன்பாளையம், சேத்துப்பட்டு ஒன்றியம் கொழாவூர், மொடையூர், ஆரணி ஒன்றியம் அய்யம்பாளையம், மேற்கு ஆரணி ஒன்றியம் வேலப்பாடி, வந்தவாசி ஒன்றியம் கொசப்பட்டு, எரமலூர், கீழ்செம்பேடு, தெள்ளாறு ஒன்றியம்

பென்னட்டகரம், கீழ்நமண்டி, பெரணமல்லூர் ஒன்றியம் ஆவணியாபுரம், செம்மாம்பாடி, செய்யாறு ஒன்றியம் மேல்மட்டை, விண்ணமங்கலம், காழியூர், அனக்காவூர் ஒன்றியம் செய்யாற்றைவென்றான், கீழாத்தூர், வெம்பாக்கம் ஒன்றியம் நமண்டி, ஹரிஹரபாக்கம், கங்கம்பாக்கம் ஆகிய கிராமங்களிலும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உழவர் பெருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

இவ் விழாக்களில் அந்தந்த பகுதி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம். இங்கு அமைக்கப்படும் வேளாண் கண்காட்சிகளைப் பார்வையிட்டு பயன்பெறலாம் என்று திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் இர.சக்ரவர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

## எஸ்.எம்.எஸ். மூலம் வேளாண் தகவல்கள்:பதிவு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

எஸ்.எம்.எஸ். மூலம் வேளாண் துறை திட்டங்கள், தகவல்களை பெற விவசாயிகள் தங்கள் விவரங்களை பதிவு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெம்பாக்கம வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கோ.பாண்டியன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: வெம்பாக்கம் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகளின் விவரங்களை சேகரித்து, கணினியில் பதிவு செய்வதுடன், வேளாண் துறை திட்டங்களையும், தொழில்நுட்ப செய்திகளையும் உடனுக்குடன் விவசாயிகளுக்கு எஸ்.எம்.எஸ். மூலம் தெரிவிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எனவே, வெம்பாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் அனைவரும், தங்கள் பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலம் தங்கள் முகவரி, சர்வே எண், பரப்பு, தொலைபேசி எண், வங்கிக் கணக்கு எண், புகைப்படம், வேளாண் துறை சேர்ந்த குறிப்புகள் ஆகியவற்றை படிவம் -1 மூலம், வரும் மே 15ஆம் தேதிக்குள் பதிவு செய்துகொண்டு பயனடையலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாய உற்பத்தி பொருள்களுக்கு நியாயமான விலை வழங்க வலியுறுத்தல்

விவசாய உற்பத்தி பொருள்களுக்கு நியாயமான விலை வழங்க தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சங்கத்தின் கரூர் மாவட்டம், தாந்தோணி ஒன்றிய சிறப்புப் பேரவைக் கூட்டம் உப்பிடமங்கலத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

சங்க ஒன்றியப் பொருளாளர் எஸ். தங்கவேல் தலைமை வகித்தார். வி.கே. தங்கவேல் முன்னிலை வகித்தார்.

சங்க மாநில துணைத் தலைவர் எஸ். செல்வராஜ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலை வழங்க வேண்டும், விவசாய மானியங்களைத் தொடர வேண்டும். வறட்சி நிவாரணம் ரூ. 15 ஆயிரத்தை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும்.

அழகாபுரி அணையிலிருந்து வரும் குடகனாரு வாய்க்காலைத் தூர்வாரி விரிவுபடுத்தி, தாளப்பட்டி, வெள்ளியணை, உப்பிடமங்கலம், வீரராக்கியம் குளங்களுக்கு தண்ணீர்விட்டு அழியும் நிலையில் உள்ள விவசாயத்தை, விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும்.

டெல்டா பகுதிக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதுபோல, தாந்தோணி ஒன்றிய பகுதிக்கும் வழங்க வேண்டும். வெள்ளியணையை தனி வட்டமாக அறிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கத்தின் மாவட்டச் செயலர் எஸ். சண்முகசுந்தரம், மாவட்டக் குழு சி. வையாபுரி, தாந்தோணி ஒன்றிய அமைப்பாளர் எம்.சி. ராஜாங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## இன்று உழவர் பெருவிழா நடைபெறும் கிராமங்கள்புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை (ஏப்.30) உழவர் பெருவிழா நடைபெறும் கிராமங்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து வேளாண் இணை இயக்குநர்(பொ) பி. எம்பெருமாள் வெளியிட்ட தகவல்:

புதுக்கோட்டை வட்டாரத்தில் சொக்கநாதன்பட்டி, கந்தர்வக்கோட்டை வட்டாரத்தில் பெரியகோட்டை, திருவரங்குளம் வட்டாரத்தில் மு.ஏ. கோட்டை, புதுக்கோட்டை விடுதி, ஆலங்குடி,

கறம்பகுடி வட்டாரத்தில் பல்லவராயன்பத்தை, கறம்பகுடி,(தென்னகர்), அறந்தாங்கி வட்டாரத்தில் எருக்கலக்கோட்டை, செட்டிகாடு, ராஜேந்திரபுரம், ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் நாட்டாணிபுரசகுடி, பனங்குளம், வெளிவயல், மணமேல்குடி வட்டாரத்தில் நெல்வேலி, மேலபாப்பனூர், கீழபாப்பனூர், திருமயம் வட்டாரத்தில் இளஞ்சாவூர், அரிமளம் வட்டாரத்தில் சாணிக்காடு, பொன்னமராவதி வட்டாரத்தில் நெறிஞ்சிகுடி, அன்னவாசல் வட்டாரத்தில்

வயலோகம், புதூர், விராலிமலை வட்டாரத்தில் மருதம்பட்டி, பையூர், குன்றாண்டார்கோவில் வட்டாரத்தில் குளத்தூர் ஆகிய கிராமங்களில் செவ்வாய்க்கிழமை

உழவர் பெரு விழா நடைபெறுகிறது.

வடகாட்டை தலைமையிடமாக கொண்டு தனி ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்தக் கோரிக்கை

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 23.59 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 23.59 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 161 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### "அதிக மகசூலுக்கு மண் மாதிரி பரிசோதனை அவசியம்'

விவசாயத்தில் அதிக மகசூல் பெற்றிட மண் மாதிரி பரிசோதனை அவசியம் என வேளாண் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த செட்டிப்புலம் ஊராட்சியில் வேளாண்துறை சார்பில் உழவர் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு வேளாண் உதவி இயக்குநர் ந. சந்திரகாசன் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் மணிமாறன், ஒன்றியக் குழு துணைத் தலைவர் ஜெயபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில், விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்களை வழங்கி எம்எல்ஏ என்.வி. காமராஜ் பேசினார்.

முகாமில் வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் நவீன வேளாண் கருவிகளை பயன்படுத்துவதால் ஆள் பற்றாக்குறை பிரச்னை தவிர்க்கப்படுவதோடு, செலவினமும் குறைகிறது. விவசாயத்தில் அதிக மகசூல் பெற்றிட மண் மாதிரி பரிசோதனை அவசியம் என நிபுணர்கள் பேசினர்.

மேலும், இன்றைய காலக்கட்டத்தில் விவசாயத்தோடு கால்நடை வளர்ப்பையும் கூடுதலாக செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும்.  அரசு அளிக்கும் மானியங்கள் குறித்து விவசாயிகள் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.சிக்கல் வேளாண் அறிவியல் மைய பேராசிரியர் டாக்டர் அனுராதா, கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் ரமேஷ், வேளாண் பொறியியல் துறை

உதவி இயக்குநர் கௌதமன், வேளாண் உதவி அலுவலர் வேதரெத்தினம் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர். அனைத்து விவசாயிகளுக்கும் அறுசுவை உணவு அளிக்கப்பட்டது.

## விளைபொருள்களுக்கு லாபகரமான விலை வேண்டும்

விவசாய விளைபொருள்களுக்கு லாபகரமான விலை கிடைப்பதை மத்திய, மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று பாரதிய கிசான் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பாரதிய கிசான் சங்கம் சார்பில் தில்லி ஜந்தர் மந்தரில் திங்கள்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரபாகர் கேல்கர் பேசியது:

நாட்டில் 60 சத வேலைவாய்ப்பை விவசாயத் துறை அளித்து வருகிறது. உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 15 சதத்தை விவசாயம் அளித்து வருகிறது.

ஆனால், விவசாயத் துறை இப்போது நலிவடைந்து வருகிறது. விவசாய இடு பொருள்களான உரம், பூச்சி மருந்து, டீசல், நீர், விதைகள், மின்சாரம் உள்ளிட்டவற்றின் விலை அதிகரித்து வருகின்றன.

விளைபொருள்களுக்கு கட்டுப்படியான விலைகள் கிடைக்காததால், எண்ணற்ற விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

இதனால், நூற்றுக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் சூழல் உருவாகியுள்ளது.

விவசாயிகளின் நலன் கருதி பொருளாதார கொள்கைகளில் மாற்றம் செய்ய வேண்டும். விவசாய விளைபொருள்களுக்கு லாபகரமான விலையை மத்திய, மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும். விளைபொருள்களை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை விவசாயிகளுக்கு சாதமாக மாற்ற வேண்டும். விவசாயிகள் உரிமைகள் பாதிக்காதவாறு விதைச் சட்டம் எளிமைப்படுத்தப்பட வேண்டும்.

விவசாயத்துக்காக தனி பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டும் என்று அவர் கூறினார். ஆர்ப்பாட்டத்தில் பாரதிய கிசான் சங்கத்தின் அகில இந்திய தலைவர் ஏ.ஆர். முருக்தே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

30.04.2013 A.M

## சூறாவளி காற்றில் உதிர்ந்த மாங்காய்கள் பழநி அருகே பல லட்ச ரூபாய் நஷ்டம்

பழநி:பழநியில் நேற்றுமுன்தினம் வீசிய, பலத்த சூறாவளி காற்றில், மா மரங்களிலிருந்து ஏராளமான மாங்காய்கள் உதிர்ந்ததால், விவசாயிகளுக்கு பல லட்ச ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

பழநி வட்டாரத்தில் சட்டப்பாறை, ஆயக்குடி, கணக்கன்பட்டி,கோம்பை பட்டி, தேக்கந்தோட்டம், ஆலமரத்துகளம் போன்ற பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில், கல்லா, செந்தூரம், கிரேப், மல்கோவா போன்றவை பயிரிடப்பட்டுள்ளது. இவ்வாண்டு போதிய மழையில்லாத போதும், மா சீசனையோட்டி மரங்களில் மாங்காய் காய்ப்பு அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு பழநி வட்டாரத்தில் இடியுடன் கூடிய பலத்த சூறாவளி காற்றுவீசியது. இதனால் மா மரங்களின் கிளைகள் உடைந்து. மாங்காய்கள் உதிர்ந்தது.

நேற்று ஆயக்குடி சந்தைக்கு டன் கணக்கில் மாங்காய்கள் விற்பனைக்கு வந்தது. ரூபாய் 12 ஆயிரத்திற்கு விற்கப்படும், கல்லாமாங்காய் ஒரு டன் ( 1000 கிலோ) மாங்காய்கள். தரம் குறைவு காரணமாக ரூபாய் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் வரை விற்கப்பட்டது.

இதனால் பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக, மா விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆயக்குடி விவசாயி விஜயன் கூறுகையில்," எங்கள் பகுதியில், பல ஏக்கர் பரப்பளவில் மா பயிரிட்டுள்ளோம்.பலத்த சூறாவளி காற்றில், மரக்கிளைகள் உடைந்து, மாம்பிஞ்சுகள், காய்கள் உதிர்ந்தன. பல லட்ச ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது,' என்றார்.

## செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் நவீன கரும்பு சாகுபடி திட்டம் துவக்கம்

செஞ்சி:செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் நிலையான நவீன கரும்பு சாகுபடி திட்டம் துவக்க விழா நடந்தது. கரும்பு விவசாயிகளின் தொழில் திறன், பண்ணை நிர்வாகத்தில் முன்னேற்றம் மற்றும் வாழ்க்கை தரத்தில் உயர்வுக்காக சர்வதேச நிதி கழகத்தின் தொண்டு ஆலோசனை பிரிவு மற்றும் சாலிடாரிடாட் ஆசியா பிணையமும் இணைந்து நவீன கரும்பு சாகுபடி திட்டத்தை நடைமுறை படுத்தி வருகின்னர். இந்த திட்டத்தின் துவக்க விழா செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை

ஆலையில் நடந்தது. துணை பொது மேலாளர் (கரும்பு) விஜயகுமார் வரவேற்றார். துணை பொது மேலாளர்(ஆராய்ச்சி) முனைவர் ஜெயபால் துவக்க உரை நிகழ்த்தினார். சர்க்கரை ஆலை உதவி தலைவர் ரமேஷ் சிறப்புரை நிகழ்த்தினார். ஆலோ சகர் முனைவர் கோபிநாதன், முதன்மை அலுவலர் முனைவர் ராஜேஸ்துபே, தெற்காசிய பிரிவு ஆலோசகர் ஹர்ஷ் விவேக் ஆகியோர் திட்டத்தில் பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங்கள், நோக்கம் குறித்து விளக்கினர். கீழ்பென்னாத்தூர் கரும்பு நாற்று உற்பத்தியாளர் கோதண்டராமன், விவசாயி சின்ன குழந்தை ஆகியோர் இயற்கை உரங்களின் பங்கு, சொட்டு நீர் பாசனம் குறித்து விளக்கினர். உதவி பொது மேலாளர் (விரிவாக்கம்) பாஸ்கர் தாஸ் நன்றி கூறினர். இதில் முன்னோடி விவசாயிகள், வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஆலை அதிகாரிகள் பங்கேற்றனர்.

### சேலத்தில் சூறாவளி காற்றுடன் மழை

சேலம்: சேலத்தில், நேற்று மாலை பலத்த சூறாவளி காற்றுடன், லேசான மழை பெய்தது.தமிழகம் முழுவதும், கடந்த சில நாட்களாக மழை பெய்வது போல் போக்கு காட்டி விட்டு செல்கிறது. சேலத்தில், நேற்று மாலை, 4 மணிக்கு பலத்த சூறாவளி காற்று வீசியது. தொடர்ந்து, பெய்த மழை சிறிது நேரத்தில் ஓய்ந்து விட்டது. அதனால், மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த மக்கள் ஏமாற்றமடைந்தனர்.சூறாவளி காற்று வீசியதில், அருணாச்சல ஆசாரி தெருவில் இருந்த பெரிய ஃப்ளக்ஸ் போர்டு கீழே விழுந்து, அதில் மின்சாரம் பாய்ந்தது. ஜோதி தியேட்டர் அருகே சூறாவளி காற்றுக்கு மின்கம்பம் கீழே சாய்ந்தது. சம்பவ இடத்திற்கு வந்த மின்வாரிய ஊழியர்கள், அவற்றை சரி செய்தனர்.

### பாலகிருஷ்ணா பாலிடெக்னிக்கில் விவசாயம் சார்ந்த தொழிற்கல்வி அறிமுகம்

சேலம்: ஓமலூர், பாலகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில், விவசாயம் சார்ந்த தொழிற்கல்வி பாடத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது.ஓமலூரில், சேலம் விமான நிலையம் எதிரே உள்ள பாலகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில், முதல் முறையாக விவசாயம் சார்ந்த தொழில் படிப்பான டிப்ளமோ இன் அக்ரிகல்சுரல் இன்ஜினியரிங் படிப்புக்குஅனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மாணவர்கள் பயன்படுவர். பத்தாம் வகுப்பு வரை படித்த மாணவர்கள், அக்ரிகல்சுரல் இன்ஜினியரிங் படித்தால், அரசு மற்றும் தனியார் நிறுவனத்தில் பணிபுரிய வாய்ப்பு கிடைக்கும். விவசாயம் தொடர்பான சுய தொழிலில் ஈடுபடுவோருக்கு இந்த படிப்பு பயனுள்ளதாக இருக்கும்.பாலிடெக்னிக் கல்லூரி சேர்மன் பாலகிருஷ்ணன் கூறியதாவது:புதிதாக தொடங்கப்பட்டுள்ள, அக்ரிகல்சுரல் இன்ஜினியரிங்

படிப்புக்கு, விவசாய தொழிலாளர்கள் குடும்பத்தை சேர்ந்த, 10 பேருக்கு சலுகை வழங்கப்படும். இந்த படிப்பில் சேர, பத்தாம் வகுப்பு வரை படித்திருந்தால் போதும். டிராக்டர் தயாரிப்பு, உரம் தயாரிப்பு, விவசாய சம்பந்தமான கருவிகள் உற்பத்தி செய்தல், நெல் அறுவடை, இயந்திரம் தயாரிப்பு, சொட்டு நீர் பாசன தயாரிப்பு போன்ற நிறுவனங்களில், மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற முடியும். மேலும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிலும் சுலபமாக வேலை வாய்ப்பை பெற முடியும். வளாகத் தேர்வு நடத்தியும், மாணவர்களுக்கு வேலை வாய்ப்பும் பெற்றுத் தரப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## பயிர்களை சேதப்படுத்தும் யானைகள் கிராம மக்கள் தவிப்பு

ஆத்தூர்: ஆத்தூர் வனப்பகுதியில் முகாமிட்டுள்ள, ஆறு காட்டு யானைகள், இரவு நேரத்தில் கிராமத்துக்குள் புகுந்து, பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன.திருவண்ணாமலை, ஜவ்வாது மலை பகுதியில் இருந்து உணவு தேடி வந்த, ஆறு காட்டு யானைகள், சேலம், ஆத்தூர் கல்வராயன் மலை வனப்பகுதியில் முகாமிட்டுள்ளன. நேற்று முன்தினம் மாலை, 5 மணியளவில் கல்லாநத்தம் முயல்கரடு வனப்பாதை வழியாக வந்த யானைகள், முருகன் கோவிலை சுற்றி முகாமிட்டிருந்தன.அதன் பின், முயல்கரடு, சந்தனகிரி கிராமத்திற்குள் புகுந்து, மரவள்ளி, மா, மக்காச்சோளம், கரும்பு உள்ளிட்ட பயிர்களை சேதப்படுத்தியது.கரும்பு தோட்டத்துக்குள் புகுந்த யானைகளை, சிலர் தீப்பந்தங்களுடன் விரட்டி சென்றனர். அவர்களை, யானைகள் திருப்பி துரத்தியதால், அலறியடித்த கொண்டு ஓட்டம் பிடித்தனர். தண்ணீர் தேடித் திரிந்த யானைகள், விவசாய கிணறு அருகில் இருந்த தொட்டியில் தண்ணீர் குடித்து விட்டு, கரும்பு தோட்டத்தில் புகுந்தது.இரவு, 9 மணியளவில், கரும்பு தோட்டத்தில் இருந்த வந்த ஆண் யானை, சந்தனகிரி நீரோடையில் இறங்கியது. பொதுமக்கள் துரத்திய போது, நீரோடையில் இருந்து வெளியே ஏற முடியாமல் தவித்த யானை, இரவு, 10 மணியளவில், கூட்டத்துடன் சேர்ந்தது.நேற்று காலை, 5 மணியளவில், ராமநாயக்கன்பாளையம், அய்யங்கரடு வனப்பகுதியில், காட்டு யானைகள் முகாமிட்டன. யானை கூட்டம், இரவில் கிராமத்துக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்துவதால், பொதுமக்கள் தூக்கமின்றி தவித்து வருகின்றனர்.

## சின்ன வெங்காயம் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி: சின்ன வெங்காயத்துக்கு, சந்தையில் நல்ல விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.குறுகிய கால பயிரான் சின்னவெங்காயம், தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, பாலக்கோடு, பென்னாகரம் உள்பட மாவட்டம் முழுவதும், மூன்று ஆயிரம் ஏக்கரில்

சாகுபடி செய்யப்பட்டுள்ளது.மாவட்டத்தில் போதிய தென்மேற்கு, வடக்கிழக்கு பருவமழை பொய்த்தால், நிலத்தடி நீர் மட்டம் கேள்வி குறியானது. இதனால், போதிய தண்ணீர் வசதியில்லாததால், விவசாயிகள் கவலை அடைந்தனர்.சில விவசாயிகள், வெங்காயத்திற்கு, தண்ணீர் பாய்ச்ச முடியாததால், 100 முதல், 120 நாட்களில், உற்பத்தியாகும், வெங்காயத்தை, 100 நாட்களுக்கு முன்பாகவே அறுவடை செய்து, சந்தையில் விற்பனை செய்தனர்.வெங்காய தட்டுப்பாடு காரணமாக, சாகுபடி காலத்துக்கு முன் அறுவடை செய்த, வெங்காயம், சந்தையில், 20 முதல், 25 ரூபாய் விலை கிடைத்தது. அதிக பரப்பளவில் வெங்காயம் சாகுபடி செய்திருந்த, விவசாயிகள், தங்களது நிலங்களில், ஆயிரம் அடி வரை ஆழ்துளை கிணறுகள் அமைத்து, வெங்காயத்துக்கு தேவையான தண்ணீர் பாசனம் செய்தனர்.மாவட்டம் முழுவதும் தற்போது சின்னவெங்காயம் அறுவடை துவங்கியுள்ளது. வெங்காயத்தின் தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதாலும், தற்போது விற்பனைக்கு வரும் சின்னவெங்காயம் தரமானதாக, உள்ளதாலும் சின்னவெங்காயத்தின் விலை கடந்த சில தினங்களாக, உயர்ந்து வருகிறது.நேற்று ஒரு கிலோ சின்னவெங்காயம், 32 ரூபாய் முதல், 38 ரூபாய் விற்பனை ஆனாது. பருவமழை பாதிப்பு, உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், பாதிக்கப்பட்டாலும், கடந்த சில தினங்களாக, "சின்ன வெங்காயத்துக்கு சந்தையில் நல்ல விலை கிடைத்து வருவது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக' விவசாயிகள் கூறினார்கள்.

## மயிலாடும்பாறை மஞ்சம் புல் அறுவடை தீவிரம்

மயிலாடும்பாறை : மலைப்பகுதியில் விளையும் மஞ்சம் புல், நட்சத்திர ஓட்டல்களில் குடில்கள் அமைக்க கொள்முதல் செய்யப்படுவதால், அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. தற்போது, மயிலாடும்பாறையில் மஞ்சம் புல் அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது.

மலைப்பகுதியில், இயற்கையாக விளையும் மஞ்சம் புல், கிராமப் பகுதியில் குடிசை வீடுகள் கூரை வேய பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த குடிசைகள், வெயில் காலத்தில் குளிர்ச்சியாகவும், மழைக் காலத்தில் கதகதப்பாகவும் இருக்கும் தன்மை வாய்ந்தவை.

தற்போது, குடிசை வீடுகளுக்கு இரும்பு தகடுகள் மற்றும் சிமென்ட் ஷீட்கள் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. இதனால், தென்னை, ஓலை, மூங்கில், மஞ்சம் புல் பயன்படுத்தி கூரை அமைப்பது குறைந்து விட்டது.

குடில்கள் அமைக்க...

அதே நேரம், நகர் பகுதிகளில் கடற்கரை கேளிக்கை விடுதிகள் மற்றும் நட்சத்திர ஓட்டல்களில்

மஞ்சம் புல் பயன்படுத்தி குடில்கள் அமைப்பது அதிகரித்து வருகிறது. இயற்கையான சூழலை நகர்ப்புறத்தில் கொண்டு வருவதில், மஞ்சம் புல் குடில்கள், முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்களும் இத்தகைய குடில்களில் தங்குவதற்கும், பொழுதுபோக்குவதற்கும் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். கிராமப் பகுதிகளில், மலைகளில் மஞ்சம் புல் அதிகளவில் தானாக விளைகிறது. அதிகபட்சம் ஆறு முதல் ஏழு அடி உயரம் வரை வளரும் தன்மை கொண்டது. முழு வளர்ச்சியை எட்டியதும் பசுமையான புல் காய்ந்துவிடும்.

பசுமையாக இருக்கும் இளம் புல்லை ஆடு, மாடுகள் உணவாக உட்கொள்ளும். காய்ந்த புல், மேய்ச்சலுக்கு உதவாது. மஞ்சம் புல் அழியாது மீண்டும் மீண்டும் வளரும் தன்மை கொண்டது. காய்ந்த புல்லை தீ வைத்து எரித்ததால் மட்டுமே, மீண்டும் புதிய புல் வளரும்.

வருமானம்

இதனால், சிலர் மஞ்சம் புல் விளையும் மலைப்பகுதிகளுக்கு தீ வைத்து எரிப்பது உண்டு. தீயில் வீணாக எரிந்து சாம்பலாகும் மஞ்சம் புல்லை அறுவடை செய்து, பெருநகரங்களுக்கு அனுப்பி பணம் ஈட்டும் பணியில், கிராம மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

பத்து கட்டுகள் கொண்ட மஞ்சம் புல், 500 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. கிராமப்பகுதியில் கொள்முதல் செய்யப்படும் மஞ்சம் புல், சென்னை, பெங்களூர் உள்ளிட்ட நகரங்களுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது.

## "சிறு தானியங்களையும் சாகுபடி செய்யுங்கள்' விவசாயிகளுக்கு வேளாண் துறை வேண்டுகோள்

நொச்சிலி : விவசாயிகள், பாரம்பரிய பயிர்களான சீயக்காய், பருத்தி, இளநீர் மற்றும் சிறு தானியங்கள் போன்ற பயறு வகைகளை அதிக அளவில் சாகுபடி செய்ய வேண்டும் என, துணை வேளாண்மை இயக்குனர் வேண்டுகோள் விடுத்து உள்ளார்.

பள்ளிப்பட்டு ஒன்றியத்திற்கு உட்பட்ட நொச்சிலியில், வேளாண் துறை சார்பில், உழவர் பெருவிழா நடைபெற்றது. ஊராட்சித் தலைவர் கிருஷ்ணம்மா நாயுடு தலைமை வகித்தார்.

இதில், திருவள்ளூர் மாவட்ட துணை வேளாண் இயக்குனர் பாபு கலந்து கொண்டு பேசியதாவது:

பாரம்பரிய பயிர்களான சீயக்காய், பருத்தி, இளநீர் மற்றும் சிறு தானியங்களான கம்பு, கேழ்வரகு போன்றவற்றை விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும்.

கம்பு, கேழ்வரகு போன்றவற்றை சாகுபடி செய்வதன் மூலம், மக்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு கிடைப்பதுடன், நல்ல லாபம் கிடைக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

பள்ளிப்பட்டு வேளாண்மை உதவி இயக்குனர் முபாரக் பாஷா, பண்ணை இயந்திரங்களின் பயன்பாடுகள் குறித்தும், கோலியாஸ் என்கிற மருந்து குறித்தும் பயிர் சாகுபடி முறை குறித்தும் விளக்கம் அளித்தார்.

இதே போல், புண்ணியம் கிராமத்தில் நடந்த உழவர் பெருவிழாவிற்கு, தலைவர் நாகபூஷணம் தலைமை வகித்தார். இதிலும், அதே கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன.

## விவசாயத்திற்காக வேலையை உதறிய இளைஞர் :காய்கறி சாகுபடியில் கை நிறைய வருமானம்

சுங்குவார்சத்திரம் : பட்டுமுடையார்குப்பம் கிராமத்தை சேர்ந்த இளைஞர், தொழிற்சாலை வேலையை உதறிவிட்டு, விவசாயப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

தோட்டப் பயிர்களான வெண்டை, கத்தரிக்காய் பயிரிடுவதில், பட்டுமுடையார்குப்பம் கிராமத்தை சேர்ந்த சிவகுமார் தீவிரம் காட்டி வருகிறார். இக்கிராமத்தை சேர்ந்த சிவகுமார், பிளஸ் 2 வரை படித்துள்ளார். படித்தவுடன் தனியார் தொழிற்சாலையில், வேலைக்கு
சேர்ந்தார்.

விவசாயத்திற்கு...

தொழிற்சாலையில், மூன்றாண்டுகள் பணிபுரிந்த பின், தனக்கு சொந்தமான நிலங்களில், விவசாயம் செய்ய ஆர்வம் ஏற்பட்டது. இதனால், வேலையை உதறிவிட்டு, விவசாயப்பணியில் இறங்கிவிட்டார்.

இதுகுறித்து,

விவசாயி சிவகுமார் கூறியதாவது:

எனக்கு சொந்தமாக, 3 ஏக்கரில் 50 சென்ட் நிலத்தில் வெண்டையும், 50 சென்ட் நிலத்தில் கத்தரிக்காய் செடியும் நடவு செய்துள்ளேன். வெண்டை விதை நடவு செய்யப்பட்ட 45வது நாளில், வெண்டைக்காய் காய்க்க துவங்கியது. இதேபோல்,

கத்தரிக்காய் செடியும், நடவு செய்யப்பட்ட 60வது நாளில் இருந்து காய்த்து வருகிறது.

தினமும், காலை 5:00 மணிக்கு

தோட்டத்திற்கு சென்று காய்களை பறித்து, வியாபாரியிடம் மொத்தமாக விற்பனைக்கு கொடுத்து விடுவேன்.

தினசரி வருமானம்

இதற்கான பணம் மறுநாள், கைக்கு வந்து சேர்ந்துவிடும். தொழிற்சாலையில், பணிபுரிவதை விட, என்னுடைய நிலத்தில் பயிர் செய்து, வருமானம் ஈட்டுவது பெருமையாக உள்ளது. 50 சென்ட் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள கத்தரி செடியில் இருந்து தினமும், 50 முதல் 60 கிலோ கத்தரிக்காய் கிடைக்கிறது.

உரவிலையை குறைக்க வேண்டும். மின்சாரம் தட்டுப்பாடில்லாமல் வழங்க வேண்டும். மானியம்

வழங்குவது குறித்து, விழிப்புணர்வு விவசாயிகளிடம் இல்லை. சொட்டுநீர் பாசன வசதியை ஏற்படுத்தி கொடுக்க வேண்டி மனு கொடுத்துள்ளேன்.
அரசு தோட்டக் கலைத் துறை அதிகாரிகள், என் நிலத்தில் சொட்டுநீர் பாசன வசதியை ஏற்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு, சிவகுமார் தெரிவித்தார்.

## இயற்கை உரமாக தக்கை பூண்டு வளர்ப்பு:மண் வளத்தை பாதுகாக்கும் விவசாயிகள்

பொன்னேரி :விளை நிலங்களில் ரசாயன உரங்களை குறைத்து, இயற்கை உரத்தை அதிகரிக்க தக்கை பூண்டு செடிகளை வளர்த்து, தழை சத்தாக விவசாயிகள் பயன்படுத்துகின்றனர்.
மீஞ்சூர் ஒன்றியம், தடப்பெரும்பாக்கம், சேகண்யம் உள்ளிட்ட 200 கிராமங்களில், விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. ஆண்டிற்கு சம்பா, குறுவை என, இரு முறை நெல் பயிரிடப்படுகிறது. சம்பா பருவத்திற்கு பின்னர், விவசாயிகள் தங்களது விளை நிலங்களை, மூன்று மாதங்களுக்கு தரிசாக போடுகின்றனர். நீர் வளம் உள்ள பகுதிகளில் மட்டும், பின்சம்பா விவசாயத்திலும் ஈடுபடுகின்றனர்.தக்கை பூண்டு வளர்ப்புவிவசாயிகள், நெல் பயிரிடுவதற்கு முன்னர், நிலத்திற்கு அடியுரமாக ஆடு, மாடுகளின் சாணத்தை அடியுரமாக பயன்படுத்தி வந்தனர்.
மேலும், வேம்பு, மா, பூவரசம் உள்ளிட்ட மரங்களின் கருகும் இலைகளையும் மக்கவைத்து, விளை நிலங்களுக்கு தழைச் சத்தாக பயன்படுத்தினர்.
இவை மிக சிறந்த இயற்கை உரங்களாக விவசாயிகளுக்கு பயன்பட்டு, அதிக மகசூலை கொடுத்தது.
காலப்போக்கில், விளை நிலங்கள் வீட்டு மனைகளாகவும், தொழிற்கூடங்களாகவும், மாறிய சூழ்நிலையில், கால் நடைகளுக்கான மேய்ச்சல் குறைந்தது.
விவசாயிகளும், கால்நடை வளர்ப்பில் ஈடுபாட்டை குறைத்துக் கொண்டனர். வேறு வழியின்றி விளை நிலங்களுக்கு ரசாயன உரங்களை பயன்படுத்த வேண்டிய சூழ்நிலையும் உருவானது.
இதனால், விளை நிலங்களுக்கு கிடைக்க வேண்டிய இயற்கை சத்துக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதை நிவர்த்தி செய்ய விவசாயிகள் சம்பா பருவம் முடிந்ததும், விளைநிலங்களில் தக்கை பூண்டை பயிரிடுகின்றனர்.
தண்ணீர் தேக்கத்ததையும், வறட்சியையும் தாங்கி வளரக்கூடியது. உவர் நிலங்களுக்கு ஏற்ற ஒரு முக்கிய பசுந்தாள் உரமாக இது பயன்படுகிறது.
இது நல்ல தழைச்சத்தாக மாறி மண் வளம் பெருகுவதுடன், கூடுதல் மகசூல் பெறுவதற்கான வாய்ப்பு களையும் உருவாக்குகிறது. இதனால் ரசாயன உரச் செலவினங்களும் குறைகிறது.
தட்டுப்பாடு
இது குறித்து, சேகண்யம் கிராமத்தை சேர்ந்த விவசாயி பாலு கூறியதாவது:
தக்கை பூண்டு நல்ல தழைச் சத்தாக இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு, 10 கிலோ, தக்கை பூண்டு

விதையை விதைத்து, 50 முதல், 60 நாட்களுக்கு பின்னர், வளரும் தக்கை பூண்டு செடிகளை டிராக்டர் மூலம் உழுது விடுவோம். அது மண்ணோடு மக்கி பசுந்தாள் உரமாக மாறிவிடு ம். ஜூன் மாதம், குறுவை பருவம் பயிரிடும் போது மிகவும் பயனுள்ளதாக அமைந்து விடும். ஆண்டிற்கு ஒருமுறை இதுபோல் செய்வதால், மண்ணின் வளம் காக்கப்படுகிறது.
வேளாண்மை துறையினர் மானிய விலையில் (ஒரு கிலோ, 21 ரூபாய்) வழங்கும் தக்கை பூண்டு விதை, விவசாயிகள் அனைவருக்கும் கிடைப்பதில்லை. ஆந்திர மாநிலம் சூளூர்பேட்டையில் ஒரு கிலோ, 50 ரூபாய் கொடுத்து வாங்கி வந்து விதைக்கிறோம்.
இவ்வாறு பாலு கூறினார்.
தக்கைப் பூண்டு விதை
தட்டுப் பாடு குறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண்மைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:
எங்களுக்கு வரும் விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்து விடுகிறோம். இனி வரும் காலங்களில் தட்டுப்பாடின்றி தக்கைப்பூண்டு விதை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு அவர் கூறினார்.

## அறுவடை தேங்காயை உடனே விற்றால் லாபம் வேளாண் பல்கலை இயக்குனர் யோசனை

கரூர்: "வரும் ஜூன் மாதம் வரை விலை உயர வாய்ப்பில்லை என்பதால், தற்போது அறுவடை செய்யும் தேங்காய்களை உடனே விற்றால் நல்ல லாபம் கிடைக்கும்' என வேளாண் பல்கலை உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:கிராமப்புறங்களில் தென்னை வளர்ப்பது வேலைவாய்ப்பாகவும், விவசாயிகளுக்கு உபரி வருமானமாகவும் இருந்து வருகிறது. கடந்த 2012-13ல் தென்னை 2.13 மில்லியன் ஹெக்டேரில் பயிரிடப்பட்டு, 15.35 மில்லியன் டன் தேங்காய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் 2012-13ம் ஆண்டின் உற்பத்தி, முந்தைய ஆண்டை விட 2.72 சதவீதம் அதிகரித்துள்ளது.தமிழ்நாட்டில் பொள்ளாச்சி சந்தையில், 2011ம் ஆண்டு தேங்காய் கிலோவிற்கு 13 ரூபாய் விற்பனையானது. கடந்த மார்ச்சில் 7 ரூபாய் என்று விலை விழ்ச்சியடைந்தது. கோடையில் தேங்காய் வரத்து அதிகம் என்பதால் சந்தை விலையில் ஏறுமுகம் இருக்க வாய்ப்பு குறைவு. தற்போது சந்தை நிலவரங்களை கருத்தில் கொள்ளும் போது உடனடி விலை ஏற்றம் இருக்காது என வர்த்தகர்கள் கூறுகின்றனர்.இந்த அம்சங்களைக் கருத்தில் கொண்டு தேங்காய் சந்தை விலை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி, ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை தேங்காய் ஒன்றின் பண்ணை விலை தேங்காய் அளவை பொறுத்து, 4 ரூபாய் 50 காசு முதல் 6 ரூபாய் 50 காசு வரை இருக்கும். விலை ஏற்றத்திற்கான வாய்ப்பு மிக குறைவு.எனவே, விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த

தேங்காய்களை சேமிக்காமல் உடனடியாக விற்பனை செய்ய பரிந்துரை செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு பொள்ளாச்சி சந்தையின் நிலவரங்களை அடிப்படையாக கொண்டது. இச்சந்தையில் விலை சற்று அதிகம். மற்ற சந்தைகளில் பண்ணை விலை சற்று குறைவாக இருக்கும்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மானியம் பெறலாம் வாங்க! விவசாயிகளுக்கு அழைப்பு

ஊட்டி:"தோட்டக்கலை துறை மூலம் வழங்கப்படும் மானிய உதவிகளை விவசாயிகள் பெற்று, பயனடைய வேண்டும்' என, அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது."வளம் குன்றா தோட்டப் பயிர் உற்பத்திக்கான இயற்கை வள பாதுகாப்பு தொழில் நுட்பங்கள்' என்ற தலைப்பில், விவசாயிகளுக்கான ஐந்து நாள் பயிற்சி மற்றும் கருத்தரங்கு, ஊட்டி ரோஜா பூங்கா பயிற்சி அரங்கில் நேற்று துவங்கியது. தேசிய தோட்டக்கலை திட்ட நிதியுதவியுடன், மத்திய மண், நீர் பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டி மையம் சார்பில், பயிற்சி வழங்கப்படுகிறது. துவக்க விழாவில், ஊட்டி, மத்திய மண் மற்றும் நீர் பாதுகாப்பு ஆராய்ச்சி மைய முதுநிலை விஞ்ஞானி டாக்டர் மணிவண்ணன் வரவேற்றார். மண், நீர் பாதுகாப்பு மைய தலைவர் டாக்டர் கோலா பேசுகையில்,""விவசாய நிலங்களில், மண் மற்றும் நீரை பாதுகாக்க வேண்டியது அவசியம்," என்றார். சிறப்பு விருந்தினராக பங்கேற்று, பயிற்சி கையேட்டை வெளியிட்டு, மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் பேசியதாவது: நீலகிரியில், 7,600 எக்டர் பரப்பளவில் விவசாயம் செய்யப்படுகிறது. அடுத்த 30 ஆண்டுகளுக்கு பின், விவசாயத்தில், நமது தேவை என்ன என்பதை உணர்ந்து, சாகுபடி முறைகளை வகுத்து கொள்ள வேண்டும். இயற்கை வேளாண்மை முறை யை கடைபிடிக்க வேண்டும். தோட்டக்கலை துறையினரால் பயிற்சி பெற்ற விவசாயிகள், தங்கள் பகுதிகளில் பயிற்சியாளர்களாக இருந்து, பிற விவசாயிகளை பயிற்றுவித்து, ஊக்குவிக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை தோட்டக்கலை துறை செய்ய வேண்டும்," என்றார். மானிய உதவிகள் நீலகிரி மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் மணி பேசியதாவது:
ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் சார்பில், 50 சதவீத மானியத்தில், காய்கறி, பழச்செடி விதைகள், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தில், உயர் விளைச்சல் தரக்கூடிய விதைகள், ஆயில் இன்ஜின், கை விசைத் தெளிப்பான் உட்பட விவசாய உபகரணங்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. 25 சதவீத மானியத்தில், மினி டிராக்டரும் வழங்கப்படுகிறது. தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம், நடப்பாண்டு 1.32 கோடி ரூபாய் நிதி கிடைத்துள்ளது. இதில், உருளைக் கிழங்கு விதை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குவது, விவசாய நிலங்களில் நாற்றாங்கால் அமைப்பது, மூலிகை பயிர் சாகுபடி செய்வது, சாகுபடி பரப்பை அதிகப்படுத்துவது, கொய்மலர் சாகுபடியை ஊக்குவிக்க மானியம் வழங்குவது போன்றவற்றிற்கு நிதி ஒதுக்கப்படுகிறது.
விவசாய நிலங்களில் மண் புழு உரம் தயாரிக்க, தேனீ வளர்க்கவும் மானியம் வழங்கப்படுகிறது.

தேனீ வளர்ப்பில் ஆதிவாசி மக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். தவிர, பல்வேறு மானிய திட்டங்கள் உள்ளன; இதனை பெற்று, விவசாயிகள் பயன்பெற வேண்டும்.
இவ்வாறு, மணி பேசினார். 100 விவசாயிகள் பங்கேற்றுள்ளனர். மண், நீர் பாதுகாப்பு ஆராய்ச்சி மைய விஞ்ஞானி டாக்டர் ராஜன் நன்றி கூறினார்.
உரம் தட்டுப்பாடு

விவசாயிகள் சிலர் கூறுகையில்,"உர விலை அதிகரித்து விட்டது; சரியான முறையில் கிடைப்பதில்லை. உரத்துக்கு மானியம் வழங்க வேண்டும். விவசாய நிலங்களில் வேலை செய்ய, தொழிலாளர்கள் கிடைப்பதில்லை' என்றனர். தோட்டக்கலை துணை இயக்குனர் மணி கூறுகையில்,
""கடந்த காலங்களில் மானிய விலையில் வழங்கப்பட்ட உரத்தை வாங்க விவசாயிகள் முன்வராததால், திட்டம் கைவிடப்பட்டது. விவசாய நிலங்களில் ஆட்பற்றாக்குறையை களைய, இயந்திரங்களை பயன்படுத்துங்கள்," என்றார்.

## வறட்சி பாதிப்பு கணக்கெடுப்பில் சிக்கல் கொடுமுடி, சிவகிரி விவசாயிகள் விரக்தி

ஈரோடு: மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதியில் ஏற்கனவே எடுக்கப்பட்ட சர்வேக்கும், தற்போது நிவாரணம் வழங்க எடுக்கப்படும் கணக்கெடுப்புக்கும், பல்வேறு வித்தியாசங்கள் வருவதால், விவசாயிகளும், அதிகாரிகளும் குழப்பம் அடைந்துள்ளனர்.தமிழத்தில் டெல்டா உட்பட அனைத்து மாவட்டங்களும், கடந்த ஓராண்டாக மழையின்றி, அணைகள், ஏரி, குளம் உள்ளிட்ட நீர்நிலைகள் வறண்டு போயின.நெல், கரும்பு, மஞ்சள், வாழை பயிர்களும், தென்னை மரங்களும் தண்ணீரின்றி காய்ந்து போயின. முதல்வர் உத்தரவை அடுத்து, தமிழக அமைச்சர்கள் குழு, கடந்த மாதம் மாவட்டங்கள் தோறும் நேரில் ஆய்வு செய்தது.இதனை அடுத்து வறட்சி பாதித்த பகுதிக்கு அரசு நிவாரணம் அறிவித்தது. ஏற்கனவே வறட்சி கணக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையில், நிவாரணம் நிர்ணயம் செய்வதற்காக, ஈரோடு மாவட்டத்தில் வேளாண் துறை அதிகாரிகளும், வருவாய்த்துறை அதிகாரிகளும் இணைந்து விவசாயிகளை நேரில் சந்தித்து வருகின்றனர்.முதற்கட்டமாக கொடுமுடி, சிவகிரி பகுதியில் பணியை துவங்கினர். கடந்த இரண்டு மாத்துக்கு முன், வறட்சி பாதிப்பு பற்றி தாக்கல் செய்த அறிக்கைக்கும். தற்போதையை கணக்கெடுப்புக்கும் இடையே, 50 சதவீதம் வரையில் குளறுபடி காணப்பட்டது.இதுகுறித்து சிவகிரி விவசாயிகள் கூறியதாவது:தமிழக அரசு வறட்சி பாதிப்பு நிதியாக, முழுமையாக பாதித்த பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு, 4,000 ரூபாயும், 50 சதவீதம் பாதித்த (நன்செய் நிலத்தின்) பயிர்களுக்கு ஏக்கருக்கு, 3,000 ரூபாய் வழங்குவதாக அறிவித்தது.சிவகிரி, கொடுமுடி பகுதியில் கடந்தாண்டு நெல் பயிரிடுவதை குறைத்து, மஞ்சள், கரும்பு, வாழை பயிரிட்டனர். வாய்க்கால், கிணற்றில் தண்ணீர் இன்றி, 50 சதவீதம் வளர்ச்சியுடன் காய்ந்து போயின.கரும்பை அவசர அவசரமாக வெட்டி

ஆலைக்கு அனுப்பினோம். மஞ்சளையும் அறுவடை செய்தோம். கடந்த முறை கணக்கெடுத்த அதிகாரிகள், தற்போது அதே நிலத்தில் பயிர்கள் இல்லை என்பதால் நிவாரணம் வழங்க இயலாது, என்கின்றனர். 50 சதவீதத்துடன் வீணாகிய பயிர்களை, அதிகாரிகள் கணக்கெடுக்கும் வரையில் வைத்திருக்க முடியாது. எற்கனவே செய்த கணக்கீட்டின்படி, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது:கொடுமுடி, சிவகிரி பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கணக்கீடு செய்தோம். கடந்த இரண்டு மாதத்துக்கு முன் கணக்கெடுத்த விவசாய நிலத்தில், கிணற்று பாசனம் மூலம் தற்போது வாழை பயிரிட்டு உள்ளனர். தவிர, அடுத்த நிலங்களில், புதிதாக பயிரிட்டும், அறுவடை செய்து, காலி நிலமாக இருப்பதால், எப்படி கணக்கிடுவது.இரண்டு மாதம் முன் கணக்கெடுப்பின்போது, கரும்பு, மஞ்சள் பயிர்கள், தற்போது தண்ணீரின்றி காய்ந்து காணப்பட்டது. புதிதாக இவர்களுக்கு நிவாரணம் வழங்க கணக்கீடு செய்யலாமா என குழப்பம் உள்ளது.தவிர, தென்னை மரங்கள் காய்ந்த விவசாயிகளும் நிவாரணம் வழங்கும்படி கோருகின்றனர். இப்பிரச்னைக்கு தீர்வாக, களப்பணியாளர்களை மீண்டும் நேரடி ஆய்வில் ஈடுபடுத்தி, உடனுக்குடன் நிவாரணம் வழங்கினால், மட்டுமே பிரச்னைக்கு தீர்வு கிடைக்க கூடும், என்றனர்.

## கொத்தமல்லி தழை கட்டு ரூ.20 மேலும் விலை உயர வாய்ப்பு

ஈரோடு: ஈரோட்டில் நேற்று, கொத்தமல்லி கட்டு ஒன்று, 20 ரூபாய்க்கு விற்பனையானது. வறட்சியால், கொத்தமல்லியின் விலை மேலும் உயரும், என வியாபாரிகள் தெரிவித்தனர்.தமிழகத்தில் பருவமழை பொய்த்ததால், விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. விவசாய நிலங்கள் யாவும் வறண்டதால், விவசாய நிலங்களை, கூறுபோட்டு விற்பனை செய்யும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்.பல விவசாயிகள் வறட்சியால், மாற்று தொழிலுக்கு சென்றதால், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் உற்பத்தி குறைந்தது. எனவே, மார்க்கெட்டுக்கு வரும் காய்கறிகளின் வரத்து வெகுவாக குறைந்த நிலையில், தேவை அதிகரித்ததால், காய்கறிகளின் விலை கணிசமாக உயர்ந்தது.இந்நிலையில், நேற்று கொத்தமல்லித்தழை ஒரு கட்டு, 20 ரூபாய்க்கு விற்பனையானதால், பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதுகுறித்து கொத்தமல்லி தழை வியாபாரிகள் கூறியதாவது:தமிழகத்தில், எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு, இந்த ஆண்டு வறட்சி நிலவுகிறது. ஈரோடு மாவட்டத்துக்கு, தர்மபுரி, ஒசூர், கிருஷ்ணகிரி உள்பட பல்வேறு மாவட்டத்தில் இருந்து, கொத்தமல்லித்தழை விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.அனைத்து மாவட்டத்திலும் வறட்சி நிலவுவதால், கொத்தமல்லித்தழையை விளைவிக்கும் விவசாயிகள், மாற்று தொழிலுக்கு சென்றனர். எனவே, ஈரோடு மார்க்கெட்டுக்கு, கொத்தமல்லித்தழையின் வரத்து குறைந்தே போனது.சில தினத்துக்கு முன், மூன்று முதல் ஐந்து ரூபாய் வரை விற்பனையான கொத்தமல்லி கட்டு ஒன்று, இன்று (நேற்று), 20 ரூபாய்க்கு

விற்பனையானது. கொத்தமல்லித்தழையின் வரத்து மேலும் குறையும் என்பதால், விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது, என்றனர்.

## இளநீரை அதிகம் குடிக்க வேளாண் துறை "அட்வைஸ்'

சத்தியமங்கலம்: இயற்கையாக விளையும் பானங்களை கோடை காலத்தில் பயன்படுத்தி, பொதுமக்கள் பயன்பெறுமாறு வேளாண்மை துறை சார்பில் விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தினர்.சத்தியமங்கலம் அரசு விதைப்பண்ணையில் உழவர் பெருவிழா நடந்தது.சத்தியமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் ரங்கநாயகி தலைமை வகித்தார். சத்தியமங்கலம் நகராட்சி தலைவர் சுப்பிரமணி பேசினார்.வேளாண் துணை இயக்குனர் ராஜேந்திரன், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை இயக்குனர் ஜெயவேலு ஆகியோர் தொழில் நுட்பம் குறித்து பேசினர். தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, விதைச்சான்று துறை, பட்டு வளர்ச்சி துறை, கால்நடை துறை உள்ளிட்ட பல துறை அதிகாரிகள் திட்டங்கள் குறித்து பேசினர்.இறுதியில், பாரம்பரிய பொருட்களான இளநீர், நுங்கு உள்ளிட்டவைகளை கோடை காலத்தில் பானமாக குடிக்குமாறும், சீகைக்காய் மற்றும் பருத்தி போன்ற இயற்கை பொருட்களை பயன்படுத்த வலியுறுத்தி விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை, சத்தியமங்கலம் உழவர் சந்தை வளாகத்தில் இருந்து, பஸ் ஸ்டாண்ட் வழியாக மணிகூண்டு வரை நடத்தினர். இயற்கை பொருட்களை பயன்படுத்தக் கோரி கலைக்குழுவினரின் வாய்ப்பாட்டு மற்றும் இசைக்கச்சேரி நடந்தது.

## 5,500 ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் ரூ.12 கோடி மானியம் வழங்கல்

கோபிசெட்டிபாளையம்: "ஈரோடு மாவட்டத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க, 5,500 ஏக்கருக்கு, 12 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது' என, தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் ராபர்ட் வின்சென்ட் தெரிவித்தார்.கோபி வட்டார வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா கொளப்பலூரில் நடந்தது. தோட்டக்கலை துறை இணை இயக்குனர் ராபர்ட் விட்சென்ட் பேசியதாவது:ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில், ஈரோடு மாவட்டத்தில், 3,000 விவசாயிகளுக்கு, 1,550 ஏக்கருக்கு, 50 சத மானியத்தில், 27 லட்சத்து, 68 ஆயிரம் ரூபாய் மதிப்பில் காய்கறி விதைகள் மற்றும் நடவு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. துள்ளிய பண்ணைய திட்டத்தில், 230 விவசாயிகளுக்கு, 500 ஏக்கருக்கு, 41 லட்சத்து, 98 ஆயிரம் ரூபாய் மதிப்பில், நீரில் கரையும் உரங்கள் மானியமாகவும், பந்தல் காய்கறி சாகுபடிக்கு, 28 லட்சத்து, 13 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் சொட்டு நீர் பாசனம் அமைக்க, 5,500 ஏக்கருக்கு, 11 கோடியே, 90 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளதுவிவசாயிகளின் உற்பத்தியை இரண்டு மடங்காக உயர்த்தி, அவர்களின் வருமானத்தை மூன்று மடங்காக்க

இதுபோன்ற மானிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இரண்டாம் பசுமை புரட்சியை உருவாக்குவதே, உழவர் பெருவிழாவின் நோக்கமாகும், என்றார்.கொளப்பலூர் டவுன் பஞ்சாயத்து தலைவர் தவசிகாமணி சீனிவாசன் தலைமை வகித்தார். சித்தோடு பால் உற்பத்தியாளர் ஒன்றிய முன்னாள் தலைவர் செல்வம் முன்னிலை வகித்தார். கோபி வேளாண் உதவி இயக்குனர் ஆசைதம்பி வரவேற்றார். ஈரோடு மாவட்ட வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் மோகனசுந்தரம், விவசாயிகளுக்கு மானிய இடுபொருட்களை வழங்கினார். தோட்டக்கலை உதவி இயக்குனர் சுமதி, வேளாண் விற்பனை துறை அலுவலர் கார்த்திகேயன், கால்நடை உதவி டாக்டர் கவுதமன் உட்பட பலர் பங்கேற்றனர்.மண் மாதிரி எடுத்தல், ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்தல், மரவள்ளி கரணை நேர்த்தி, குழித்தட்டு நாற்றங்கால் தயாரித்தல் உள்ளிட்ட செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன.

## மாம்பழத்திற்கு விலையிருந்தும் விளைச்சல் இல்லாததால் ... கேரள வியாபாரிகளை எதிர்நோக்கும் ஸ்ரீவி.,விவசாயிகள்

ஸ்ரீவில்லிபுத்தூர்:மாம்பழத்திற்கு மார்க்கெட்டில் விலையிருந்தும், விளைச்சல் குறைவால், விவசாயிகள் பாதிக்கப்பட்டு
உள்ளனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், வத்திராயிருப்பு, செண்பகதோப்பு பகுதியில், ஆயிரகணக்கான ஏக்கர்களில், விவசாயிகள் மா மரங்கள் நடவு செய்து, விவசாயம் செய்து வருகின்றனர். இங்கு விளையும் சப்பட்டை, பஞ்சவர்ணம், போன்ற மாம்பழங்கள், அதிக ருசியுடன் இருப்பதால், இப்பகுதி பழங்களுக்கு கிராக்கி அதிகம். இங்கு விளையும் மாங்காய்களை, திருவனந்தபுரம், கொச்சி, மதுரை, உட்பட பல இடங்களை சேர்ந்த வியாபாரிகள் வந்து, வாங்கி செல்கின்றனர். இந்நிலையில், கடந்தாண்டு சரி வர மழை பெய்யவில்லை. பொதுவாக தையில் மாமரங்களில் பூ பூக்க ஆரம்பிக்கும். ஆனால் மழையின்றி தாமதமாக பூத்தது. கடுமையான வெயிலால் பூக்களில் குறைவான காய்களே வந்தன. இந்நிலையில் கடந்த சில வாரங்களாக, ஸ்ரீவி., பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. மரங்களில் மாம்பிஞ்சுகள் உதிர்ந்தன. காய்கள் வந்தும் அதன் பலனை அனுபவிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர்.

கடந்த இரு வாரங்களாக மார்க்கெட்டுகளில் மாம்பழங்கள் வரத்து அதிகரித்துள்ளது. ஆனால் கிலோ சப்போட்டா 50 ரூபாய் , பஞ்சவர்ணம் 75 ரூபாய் வரை விற்கப்பட்டு வருகிறது. ஆனால் விவசாயிகளுக்கு மாங்காய்க்குரிய விலை கிடைக்காத நிலை உள்ளது. இதனால் விவசாயிகள், விளைச்சல் குறைந்தும் , மாங்காய்களுக்கு விலை கிடைக்காமல் பாதிப்படைந்துள்ளனர்.

விவசாயி சக்திவேல்,"" காலம் தாழ்த்தி பெய்த மழையால், மா மரங்களில் காய்கள் விளையவில்லை. உற்பத்தி கடுமையாக பாதிப்படைந்துள்ளது. குறைவான உற்பத்தி இருந்தும்,

அதற்குரிய விலையும் கிடைக்கவில்லை. மார்க்கெட்டில் மாம்பழத்திற்கு அதிகவிலை உள்ளது. இதுவரை கேரள வியாபாரிகள் ஸ்ரீவி.,பகுதிக்கு வரவில்லை. அவர்கள் வந்தால் தான், மாங்காய்க்கு விலை அதிகம் கிடைக்கும் என, எதிர்பார்க்கிறோம்.,"என்றார்.

## கோடையின் தாக்கம் அதிகரிப்பு இளநீர் விலையும் கடும் உயர்வு

சிவகங்கை:கோடைவெயில் தாக்கத்தால், இளநீரின் தேவை அதிகரித்துள்ளதையடுத்து, தென் மாவட்டங்களில், இளநீர் விலை கிடுகிடுவென உயர்ந்துவிட்டன.

தமிழகத்தில், மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை உட்பட தென் மாவட்டங்களுக்கு, பொள்ளாச்சியில் இருந்து, வியாபாரிகள் இளநீரை மதுரைக்கு எடுத்து வருகின்றனர்.

மதுரையில், மொத்தமாக வாங்கும் வியாபாரிகளிடம் பெரிய அளவிலான செவ்விளநீர், பச்சை காய் போன்ற ரக (அரை லிட்டர் தண்ணீர் இருக்கும்) காய்களை ரூ.12க்கும், சிறிய அளவிலான (கால் லிட்டர் தண்ணீர்) காய்களை ரூ.10க்கும் வாங்கி வருகின்றனர்.

ரூ.40க்கு விற்பனை: ராமநாதபுரம், சிவகங்கை, சிவகாசி, சாத்தூர் போன்ற இடங்களில், இளநீருக்கு நல்ல தேவை இருப்பதால், இதன் விலை, பெரிய சைஸ் இளநீர் மற்றும் செவ்விளநீர் ஒன்று ரூ.40க்கும், சிறிய இளநீர் ஒன்று ரூ.25க்கும் விற்கப்படுகிறது.

தென்னை விவசாய பண்ணை உரிமையாளர் கனநாதன் கூறுகையில்,"" தென்மாவட்ட அளவில், தேங்காய் எண்ணெய் தயாரிக்க தேவையான தேங்காய்கள் தான் விளைகின்றன.

பொள்ளாச்சியில் மட்டுமே, அதிக நீர் தரக்கூடிய இளநீர் விளைகிறது. தினமும், அங்கிருந்து மதுரைக்கு 20 முதல் 30 ஆயிரம் இளநீர் வரும். அவற்றை, தென்மாவட்ட வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். இந்த ஆண்டு வழக்கத்தை விட, கோடையின் தாக்கம் அதிகரித்துள்ளதால், இளநீர் ஒன்று, விலை ரூ.40 வரை அதிகரித்து விட்டது," என்றார்.

## வீடுகள், விவசாய பயிர்களை புரட்டிப்போட்ட சூறாவளி ரூ.4 கோடி பயிர்கள் நாசம்

சின்னமனூர்:தேனி மாவட்டத்தில் வீசிய சூறாவளி காற்றினால்,ரூ.4 கோடி மதிப்பில் வீடுகள், வாழைகள் உள்ளிட்ட விவசாய பயிர்கள் சேதமடைந்தன.

கடந்த இரு வாரங்களில் சூறாவளி மழையால், ஓடைப்பட்டி, சீப்பாலக்கோட்டை, உத்தமபாளையம் பகுதிகளில், பல லட்சம் மதிப்பிலான வாழைகள் சேதமானது

.நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு, தேனி, வீரபாண்டி, கோட்டூர், சீலையம்பட்டி பகுதிகளில் கன மழை பெய் தது.

தொடர்ந்து மூன்று மணிநேரமும், பின்னர் நள்ளிரவு ஒரு மணியிலிருந்தும் துவங்கி தொடர்ந்து

பெய்தது. கோட்டூர், சீலையம்பட்டி பகுதியில் நள்ளிரவில் பெரும் சூறாவளி காற்றுடன் மழை பெய்தது.

இதனால், இப்பகுதியில் ரூ. 4 கோடி மதிப்பிலான வாழை, தென்னை, சோளம், பப்பாளி ஆகிய பயிர்கள் நாசமாகின. சீலையம்பட்டி பகுதியில் பயிரிடப்பட்டிருந்த 300 ஏக்கர் வாழையில், சண்முகநாதன், பாலன், முருகன், வீரமணி, செல்வராஜ், ரவி, சுந்தர்ராஜ், குருசாமி, பழனிச்சாமி உள்ளிட்ட விவசாயிகளின் 170

ஏக்கர் வாழைகள் சேத

மாகின.

வீராச்சாமி, மற்றும் சிலரது தோட்டத்தில் 300 தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன.

இதே போன்று, கோட்டூரில் 210 ஏக்கரில் வாழையும், 45 ஏக்கரில் சோளமும் பிற பயிர்களும் சூறாவளிக்கு இரையாகின.தவிர, 30 க்கும் மேற்பட்ட மின் கம்பங்களும், மரங்களும் சாந்தன. இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.சேத மதிப்பு ரூ. 4 கோடி. தேனி அருகே முத்துதேவன்பட்டியில், காளிமுத்து, ஈஸ்வரன், மச்சக்காளை, வீராச்சாமி, செல்லப்பன், சின்னகனகு, பாஸ்கர செல்வன் ஆகியோரது வீடுகளின் கூரைகள் பறந்தன. பாப்புராஜ் என்பவரது வீட்டு முன் இரண்டு மரங்கள் வேரோடு சாய்ந்து மாட்டுக்கொட்டடை மீது விழுந்தன.

இதில் கணவன்,மனைவியும், ராஜேஸ்வரி, 25, என்ற கர்ப்பிணியும், ரோஜா, 23, ஆகியே நான்கு பேர் லேசான காயத்துடன் உயிர் தப்பினர். முத்துதேவன்பட்டியில் ஸ்டாலின் என்பவரது வாழைத்தோட்டம் அழிந்தது.

வருவாய்த்துறை, விவசாயத்துறையினர் இணைந்து, சேத விவரங்களை மதிப்பீடு செய்து வருகின்றனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

30.04.2013 A.M

---

## மீன்கள் வளர்த்து பண்ணை குட்டைகள் மூலம் உபரி வருமானம் ஈட்டலாம் வேளாண் துணை இயக்குனர் தகவல்

சேதுபாவாசத்திரம், : பண்ணை குட்டைகள் அமைத்து, அதில் மீன்கள், கோழி, புறாக்கள் வளர்த்து உபரி வருமானம் பெறலாம் என வேளாண் துணை இயக்குனர் தெரிவித்தார்.

சேதுபாவாசத்திரம் வட்டாரம் இரண்டாம்புளிக்காடு, மருதங்காவயல், கொள்ளுக்காடு, புதுப்பட்டினம், சரபேந்திரராஜன்பட்டினம், பனங்குளம், முதுகாடு, ஆவுடையாணிக்கோட்டை, வலையன்வயல், தூராங்குடி ஆகிய கிராமங்களில் 13 துறைகள் இணைந்து உழவர் பெருவிழா நடத்தினர்.

இதில் மாவட்ட வேளாண் துணை இயக்குனர் ராமதாஸ் பேசுகையில்,

'புவிசார்பு மண்வளம் அறிவதற்கு மண்பரிசோதனை செய்ய வேண்டும். மண்மாதிரி முடிவுகளுக்கு ஏற்ப பயிர் சாகுபடி முறையை மேற்கொள்ள வேண்டும். மண்மாதிரி முடிவுகளுக்கு ஏற்ப தேவை அறிந்து தேவையான நேரங்களில் மட்டும் இயற்கை உரங்கள் மற்றும் ரசாயன உரங்களை இடவேண்டும். தேவைக்கு அதிகமாக ரசாயன உரங்களை இட்டு மண்ணின் தரத்தையும், வளத்தையும் கெடுக்கக்கூடாது. மேலும் நடப்பு கோடை பருவத்தில் பண்ணைக்குட்டைகள் அமைப்பதன் மூலம் குறைந்த நீர் தேவையுடைய மக்காசோளம், ராகி, உளுந்து, கடலை, எள் போன்ற பயிர்களையும், காய்கறிகள், பூக்கள் போன்ற தோட்டக்கலை பயிர்களையும், கால்நடைகளுக்கு தேவையான புல் கரணைகளையும் பயிரிடலாம். பண்ணைக்குட்டைகளில் நாட்டு ரக மீன் வகைகளை வளர்த்து லாபம் பெறலாம். குட்டைக்கு மேலே சிறிய குடில்கள் அமைத்து கோழிகள் மற்றும் புறாக்கள் வளர்த்து அதன் எச்சங்களை மீன்கள் உணவாக எடுத்துக்கொண்டு வளர்வதற்கு வழிவகை செய்து உபரி வருமானம் பெறலாம். மண் வளம் காப்பதற்கு இயற்கை மற்றும் தழை உரங்களை அதிகளவு பயன்படுத்தவேண்டும். 2 மடங்கு உற்பத்தியும், 3 மடங்கு வருமானமும் பெற திருந்திய நெல் சாகுபடி என்ற ஒற்றை நாட்டு நடவு முறையை கையாளவேண்டும்' என்றார்.

வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி, வேளாண் அலுவலர் மதியரசன், உதவி அலுவலர் மணிமாறன், பொறியாளர் பொய்யா மொழி, பத்மநாதன், கால்நடை மருத்துவர்கள் விஜயராகவன், கவிதா, பிரகாஷ், செல்வி, வீரமணி விற்பனை துறை வேளாண் அலுவலர் மாலதி, உதவி அலுவலர் சவுந்தர்ராஜன், வேப்பங்குளம் வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் மோகன்தாஸ், உதவி பேராசிரியர் கணேசன், தோட்டக்கலை அலுவலர் சக்தி வேல், உதவி அலுவலர்கள் சின்னதுரை, ஜானகிராமன், பட்டு வளர்ச்சி துறை உதவி ஆய்வாளர் கோபால்சாமி, விதை சான்ற அலுவலர் சிவக்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தடப்பள்ளி, அரக்கன் கோட்டை வாய்க்காலில் உயிர் தண்ணீர் திறப்பு

கோபி, : தடப்பள்ளி, அரக்கன் கோட்டை பாசனத்திற்கு வாய்க்காலில் உயிர் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் கோபி மற்றும் அதைச்சுற்றியுள்ள காசிபாளையம், மேவாணி, புதுக்கரைபுதூர், பி.மேட்டுப்பாளையம், பங்களா புதூர், டி.என்.பாளையம், கள்ளிப்பட்டி, கணக்கம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன வாய்க்கால்களை நம்பி சுமார் 25 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் உள்ளது. இதில் ஆண்டுதோறும் இரண்டு போக நெல் மற்றும் கரும்பு, வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்து வந்தனர். இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பவானி சாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் போதிய அளவு பருவ மழை பெய்யாத நிலையில் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்ததை தொடர்ந்து கடந்த ஆண்டு ஒரு போக சாகுபடி முற்றிலும் பாதிக்கப்பட்டது

இந்நிலையில், காவிரி நதிநீர் ஆணைய தீர்ப்பை கடந்த மாதம் மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டதை தொடர்ந்து தமிழக அரசும் அந்த தீர்ப்பை உடனடியாக அமல்படுத்தியது. அதனால் இந்த ஆண்டு முதல்போக சாகுபடிக்கு கடந்த 15ம் தேதி தண்ணீர் திறந்து விடப்படவில்லை. இதனால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதிகளில் இந்த ஆண்டும் நெல் உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டது. அதே நேரத்தில் பாசன பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வாழை, கரும்பு மற்றும் தென்னை போன்ற பயிர்கள் தண்ணீர் இல்லாமல் கருகியது.

இதனால் தடப்பள்ளி மற்றும் அரக்கன் கோட்டை பாசனத்திற்கு உயிர் தண்ணீர் விட வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகள் வலியுறுத்தினர். அதைத்தொடர்ந்து நேற்று காலை பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்திற்கு 600 கன அடி தண்ணீர் திறந்து

விடப்பட்டுள்ளது. இந்த உயிர் தண்ணீர் 12 நாட்களுக்கு திறக்கப்பட உள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கம்பம் பகுதியில் கோடைகால பயிரில் நோய் தாக்குதல் அதிகரிப்பு விவசாயிகள் கவலை

கம்பம், : கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கோடைகால பயிரில் நோய் தாக்குதல் அதிகரித் துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கம்பம் ஊமை வாய்க்கால் பகுதியை சுற்றிலும் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு இரண்டாம் போக நெல் அறுவடை பணி முடிந்து விட்டது. தற்போது கோடை காலம் என்பதால் இன்னும் இரண்டு மாதங்களுக்கு முல்லை பெரியாற்றில் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கோடை கால பயிர்களான சலம்பு, பாசிப்பயறு, தட்டைப்பயறு உளுந்து உள்ளிட்டவைக ளை விதைத்துள்ளனர்.

தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் இந்த பயிர்களில் நசுகினி என்னும் பூச்சிகளின் தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதை தடுக்க விவசாயிகள் மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயி முத்துச்சாமி கூறுகையில், ஜூன் மாதம் முதல் வாரத்தில் அடுத்த முதல் போக நெல் நடவு பணிக்கு தயாராவோம். தற்போது விதைத்துள்ள கோடை கால பயிர்களில் உள்ள காய்களை பறித்து விட்டு செடிகளை அடியுரமாக அப்படியே வயல்களில் உழுது நடவுப்பணி மேற்கொள்வோம்.

இது மிகவும் சிறந்த இயற்கை உரமாக பயன்படுகிறது. ஆனால் கடந்த சில தினங்களாக இந்த பயிர் களில் நோய் தாக்குதல் அதிகரித்து வருவதால் மருந்து தெளித்து வருகிறோம், என்றார்.

## கறம்பக்குடி அருகே உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு இடுபொருள்

கறம்பக்குடி, : கறம்பக் குடி வட்டம் பந்துவக்கோட்டை கிராமத்தில் உழவர் பெருவிழா நடைபெற்றது. விழாவிற்கு ஒன்றியக்குழுத் தலைவர் கெங்கையம்மாள் சொக்கலிங்கம் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் செல்லதுரை முன்னிலை வகித்தார். விழாவில் கறம்பக்குடி வட்டார ஆத்மா கமிட்டி தலைவர் பச்சைகுட்டி கலந்து கொண்டு விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்கினார். ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கறம்பக்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மனோகரன், இளநிலை பொறியாளர் அன்புநாதன், சர்க்கரை ஆலை அலுவலர் ஜீவானந்தம், தோட்டக்கலை உதவி

அலுவலர் அழகுதுரை, வேளாண் விற்பனைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் கோபாலகிருஷ்ணன், கறம் பக்குடி வேளாண் அலுவ லர் ஆனந்த் மற்றும் சிவக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

வேளாண் மை அலுவலர் லூர்து ராயப்பன் நன்றி கூறினார்.

## கரும்புத்தோகையை ஊட்டமேற்றி தீவனமாக மாற்றும் முறைகள் கால்நடைத்துறை அதிகாரிகள் யோசனை

சிவகங்கை, : கரும்புத்தோகையை ஊட்டமேற்றி பதப்படுத்திய தீவனமாக மாற்றுவது குறித்து கால்நடைத்துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கால்நடைத்துறையினர் கூறியதாவது:

கரும்பு வெட்டும்போது, ஒரு டன் கரும்புக்கு சுமார் 150 கிலோ வரை தோகை கிடைக்கும். இத்தோகையை பதப்படுத்திய தீவனமாக மாற்றுவதன் மூலம் ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்கு பயன்படுத்த முடியும். தீவனமாக மாற்றுவதற்கு ஆயிரம் கிலோ கரும்புத் தோகைக்கு, கரும்புக் கழிவுப்பாகு அல்லது வெல்லம் 20 கிலோ, சமையல் உப்பு 10 கிலோ, யூரியா 10 கிலோ ஆகியவை தேவைப்படும்.

செய்முறை: ஆயிரம் கிலோ தோகைக்கு 7*7*4 அடி அளவுள்ள குழி போது மானது. ஒரு ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யும்போது கிடைக்கும் 7ஆயிரம் கிலோ தோகையை பதப்படுத்த தேவைப்படும் குழியின் அளவு 12*12*8 அடி ஆகும். இக்குழியை நீர் தேங்காத மேடான இடத்தில் அமைத்திட வேண்டும். குழியின் உட்பகுதியை களிமண் கொண்டு மெழுகி சீர் செய்ய வேண்டும். கரும்புத் தோகையை 1 அல்லது 2 அங்குலம் அளவுள்ள சிறு, சிறு துண்டுகளாக வெட்ட வேண்டும். துண்டாக வெட்டப்பட்ட கரும்புத் தோகையை அரை அடி அளவுக்கு அடுக்கி உப்பு, யூரியா, வெல்லம் அல் லது கழிவுப்பாகு கரைசலை தெளிக்க வேண்டும். ஒவ்வொரு அரை அடிக்கும் இக்கரைசலை தெளிக்க வேண்டும். குழியை நிரப்பிக் கொண்டு வரும்போது நன்றாக அழுத்தம் கொடுக்க வேண்டும். இறுதியாக குழியின் விளிம்புவரை நிரம்பிய பின், கூம்பு வடிவமாக அமைத்து நன்றாக அழுத்தி பாலித்தீன் விரிப்புக் கொண்டு காற்று மற் றும் மழைநீர் புகாமல் மூடிவிட வேண்டும். பாலத்தீன் விரி ப்பு மீது தேவையான அளவு மண் கொட்டி நன்றாக பூசி மொழுகி விட வேண்டும்.

குழியை குறைந்தது ஒரு மாதத்திற்கு மூடிய நிலையிலே விட்டு விட வேண்டும். அதன்பிறகு குழியை திறக்கும்போது, முதலில் மேல் பகுதியில் உள்ள மண்ணை நீக்க வேண்டும். பின்பு பாலித்தீன் உறையை சிறிதே அகற்றி தேவையான தீவனத்தை எடுத்த பிறகு மீண்டும் நன்கு

மூடிவிட வேண்டும். குழியைத் திறக்க ஆரம்பித்து விட்டால் தொடர்ச்சியாக எடுத்து முடித்துவிடுவது நல்லது. இந்த தீவனத்தை வறட்சி காலங்களில் பயன்படுத்தலாம். காற்றும், மழை நீரும் புகாமல் பாதுகாக்கப்படும் நிலையில் இத்தீவனம் பல வருடங்களுக்கு கெடாமல் அப்படியே இருக்கும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## போலி உறுப்பினர் சேர்க்கை விவசாயிகள் மாடுகளுடன் கலெக்டர் ஆபிஸ் முற்றுகை



நெல்லை : பாளையங்கோட்டை தாலுகா பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தினர் முருகையா என்பவர் தலைமையில் நேற்று 5 பசு மாடுகளுடன் நெல்லை கலெக்டர்அலுவலகம் வந்தனர். பின்பு மாடுகளை வரிசையாக நிறுத்தி நூதனமான முறையில் போராட்டம் நடத்தினர். அவர்கள் கலெக்டரிடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

தற்போது நெல்லை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் தேர்தல் நடக்கவுள்ளது.

## கோதுமை கொள்முதல் 12.5% உயர்வு



புதுடெல்லி : கோதுமை அதிகம் விளையும் மாநிலங்களில் விளைச்சல் அதிகரித்ததால் 2013,14ம் ஆண்டில் மத்திய அரசின் கோதுமை கொள்முதல் 12.5 சதவீதம் அதிகரித்து இதுவரை 1.71 கோடி டன்னாக உள்ளது. கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் 1.52 கோடி டன்னாக இருந்தது. ரபி பருவ முக்கிய பயிரான கோதுமை ஏப்ரல் முதல் ஜூன் வரையில் அதிகளவில் கொள்முதல் செய்யப்படுகிறது. பஞ்சாப், மத்தியப்பிரதேசத்தில் கோதுமை வரத்து அதிகரித்துள்ளது.

ஹரியானாவில் வரத்து சற்றே பின்தங்கியுள்ளது. கடந்த ஆண்டில் 1.63 கோடி டன்னாக இருந்த கோதுமை வரத்து தற்போது 1.85 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. கோதுமைக்கு ஆதரவு விலையாக குவிண்டாலுக்கு ரூ.1,350 வழங்கப்படுகிறது. நடப்பு பருவத்தில் 4.41 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்ய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த பருவத்தில் 9.23 கோடி டன் கோதுமை உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய வேளாண் செய்திகள்

30.04.2013 A.M

---

## கடும் வறட்சியால் செஞ்சி பகுதிகளில் தண்ணீர் இல்லாமல் கருகும் நெல், கரும்பு பயிர்கள்

செஞ்சி,

கடும் வறட்சியால் செஞ்சி பகுதிகளில் தண்ணீர் இல்லாமல் நெல், கரும்பு பயிர்கள் கருகுகின்றன.

கடும் வறட்சி

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை, வைகாசி மாதங்களில் கடும் வெயில் ஏற்பட்டு தண்ணீர் பற்றாக்குறை ஏற் படுவது வழக்கம். ஆனால் இந்த வருடம் சில இடங்களில் புயல் தாக்கிய போதும் செஞ்சி பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. அதன் எதிரொலி சித்திரை ஆரம்பத்திலேயே வறட்சி நிலவ ஆரம்பித்து விட்டது.

நெல், கரும்பு பயிர்கள் கருகின

செஞ்சியை சுற்றிலும் ஏராளமான மலைகள், இதனால் வெயிலின் தாக்கம் அதிகளவில் மக்களை வாட்டி வதைக்கிறது. ஏற்கனவே பல மாதங்களுக்கு முன் கிணற்று நீரை ஆதாரமாக வைத்து பயிர் செய்த கரும்பு பயிர்கள் தற்போது தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விட்டு விட்டதால் நெகனூர், விற்பட்டு, அவியூர், சேதுவராயநல்லூர் உள்ளிட்ட கிராமங்களில் ஏராளமான கரும்பு பயிர்கள் வாடிவிட்டன. இதே நிலை தான் சில இடங்களிலும் நெல் பயிருக்கும் ஏற்பட்டுள்ளன. கிணற்றில் கிடைத்த தண்ணீரை சிறிது சிறிதாக பாய்ச்சி காப்பாற்றியது. இருப்பினும் சில இடங்களில் நெல் பயிரும் கருகி விட்டன. இதனால் இவைகளை பயிர் செய்த விவசாயிகள் மிகவும் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

## அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கூட்டத்தில் தீர்மானம்

உப்பிடமங்கலம்,

அனைத்து விவசாயி களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டம்

கடவூர் வட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கூட்டம் தரகம்பட்டியில் உள்ள மாதா திருமண மண்டபத்தில் நடை பெற்றது. கூட்டத்திற்கு கடவூர் வட்டச் செயலாளர் சக்திவேல் தலைமை தாங்கினார். வட்டக்குழு உறுப்பினர்கள் பழனிவேல், குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சந்திரமோகன் வரவேற்றுப் பேசினார்.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரத்தினவேல் மற்றும் இலக்குவணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

தீர்மானங்கள்

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு:-

அனைத்து விவசாயி களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்கவேண்டும்.

கடவூர் ஒன்றியத்தில் உள்ள விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கவேண்டும். குடி தண்ணீர் தட்டுப் பாட்டை போக்க போர்க்கால அடிப்படையில் 20 ஊராட்சிகளிலும் ஆழ் குழாய் கிணறு அமைத்து குடி தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கள் உள்பட பல்வேறு தீர்மா னங்கள் நிறைவேற்றப் பட்டன.

## கோவை மாவட்டத்தில் வறட்சிக்காக ரூ.5.85 கோடி ஒதுக்கீடு உழவர்விழாவில் அமைச்சர் தாமோதரன் தகவல்

கோவை

கோவை மாவட்டத்தில் வறட்சிக்காக ரூ.5.85 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது என்று உழவர் விழாவில் அமைச்சர் தாமோதரன் தெரிவித்தார்.

உழவர் பெருவிழா

அன்னூர் ஊராட்சி ஒன்றியம், காரேகவுண்டன்பாளையம் ஊராட்சி கெம்பநாயக்கன்பாளையம் விளையாட்டு திடலில் உழவர் திருவிழா, கோவை மாவட்ட கலெக்டர் மு. கருணாகரன் தலைமையில் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணராஜன் வரவேற்றார். ஒன்றியக்குழு தலைவர் கண்ணம்மாள், மாவட்ட கவுன்சிலர் டி.கே. அமுல் கந்தசாமி, பஞ்சாயத்து தலைவர் சாந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் வேளாண்மை துறை அமைச்சர் தாமோதரன் கலந்து கொண்டு பேசினார். அவர் கூறியதாவது:–

தமிழகத்தில் 16 ஆயிரம் கிராமங்களில் உழவர் பெருவிழா நடக்கிறது. விவசாயிகள் முன்னேற புதிய தொழில் நுட்பங்களை கடை பிடிக்க வேண்டும். 2–ம் பசுமைபுரட்சி அடைய வேண்டும். தமிழகத்தில் மழை குறைவு. சொட்டு நீர் பாசன திட்டத்தை பயன்படுத்த வேண்டும். சிறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் சொட்டு நீர் பாசன கருவி வழங்கப்படுகிறது. 100 சதவீதம் மானியம் வேறு மாநிலத்தில் எங்கும் கிடையாது. வேளாண்மைதுறை இயந்திரமயமானால் உற்பத்தி அதிகம் கிடைக்கும். 101 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டு இந்தியா முதலிடம் பிடித்து உள்ளது.

கூட்டுறவு துறையில் விவசாய தளவாடம் வாடகைக்கு விடப்படுகிறது. வறட்சி காரணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15 ஆயிரம் வழங்கப்படும். விவசாயிகள் பயிர் இன்சூரன்ஸ் செய்ய வேண்டும். வறட்சிக்காக 1,300 கோடி ரூபாய் ஒதுக்கபட்டு உள்ளது. இதனால் 21 லட்சம் விவசாய குடும்பம் பயன்பெறும்.

கோவை மாவட்டத்தில் 5.85 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது. 1 லட்சத்து 20 ஆயிரம் வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் கோவை மேயர் செ.ம.வேலுசாமி, அவினாசி எம்.எல்.ஏ. கருப்பசாமி, அன்னூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஸ்ரீதரன், அல்லப்பாளையம் பஞ்சாயத்து தலைவர் வெங்கிடுபதி, கணுவக்கரை வேலுச்சாமி, அம்பாள் பழனிச்சாமி, ஒன்றிய கவுன்சிலர்கள் சாய்செந்தில், லட்சுமணமூர்த்தி, மற்றும் கதர்கடை பழனிச்சாமி, வடக்கலூர் ராஜாமணி, பிஞ்சமடை காளிமுத்து, நகர செயலாளர் சவுகத்அலி, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்டத்தில் மண் மற்றும் நீர்வளம் குறையாமல் விவசாயம் செய்ய வேண்டும் கலெக்டர் வேண்டுகோள்

**ஊட்டி,**

நீலகிரி மாவட்டத்தில் எந்த ஒரு தொழில் நுட் பத்தை பயன் படுத்தினா லும் மண் மற்றும் நீர் வளம் குன்றாமல் விவ சாயம் செய்ய வேண்டும் என்று நீலகிரி மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் வேண்டுகோள் விடுத்தார்.

தொழில் நுட்ப பயிற்சி

நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு 'வளம் குன்றாத இயற்கை விவசாயம்' எனும் தலைப்பில் தொழில் நுட்ப பயிற்சி முகாம் மத்திய நீர்வள ஆராய்ச்சி மற்றும் தோட்டக்கலை துறை சார்பில் ஊட்டி ரோஜா பூங்கா தோட்டக்கலை பயிற்சி அரங் கில் 5 நாட்கள் நடைபெறுகி றது.

இந்த பயிற்சி முகாமை நீலகிரி மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் நேற்று தொடங்கி வைத்தார். பின்னர் அவர் பேசும் போது கூறிய தாவது:- நீலகிரி மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் பெண்களாக இருப்பது மகிழ்ச்சியை தருகிறது.

மண்- நீர் வளம் குறையாமல் விவசாயம் செய்ய வேண்டும்

விவசாயிகள் எந்த ஒரு தொழில் நுட்பத்தை பயன் படுத்தினாலும் மண் மற்றும் நீர் வளம் குன்றாமல் விவ சாயம் செய்ய வேண்டும். இந்த முகாமில் பயிற்சி எடுத்து கொண்ட விவசாயிகள் தங்கள் பகுதிகளில் உள்ள விவசாயி களுக்கும் இந்த பயிற்சிகளை கற்று தர வேண்டும்.

இந்த முகாமில் கலந்து கொண்ட விவசாயிகளை நல்ல திறன் கொண்ட விவ சாயிகளாக உருவாக்கி அவர் கள் மூலம் மாவட்டத்தில் மற்ற இடங்களில் பயிற்சி அளிக்க துறை அதிகாரிகள் முயற்சி மேற்கொள்ள வேண் டும். இவ்வாறு அவர் கூறினார். மத்திய அரசு நீர் மற்றும் மண்வள ஆராய்ச்சி மைய இயக்குனர் டாக்டர் கோலா பேசும் போது, விவசாயம் என்றால் மண் மற்றும் நீர் இணைந்து உள்ளது. இந்த இரண்டையும் பாதுகாப்பது விவசாயிகளின் முக்கிய கடமை.

இந்தியாவில் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தண்ணீர் பற்றாக் குறை உள்ளது. நீலகிரி மாவட்டத்திலும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு உள் ளது. எனவே மண் மற்றும் நீரை பாதுகாப்பதில் ஒவ்வொரு வரும் அக்கறை காட்ட வேண்டும். நீர், மண் வளம் குறையாமல் இயற்கை விவ சாயம் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த பயிற்சியில் தோட்டக் கலை துணை இயக்குனர் மணி, மத்திய நீர் மற்றும் மண் வள முதன்மை விஞ்ஞானி டாக்டர் மணிவண் ணன், விஞ்ஞானி ராஜா உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.